விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 04 வியாழக்கிழமை (17.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089

# வடக்கு மக்களின் பிரச்சினையில் தெற்கின் பங்களிப்பே முக்கியம்



## கோடிகளை கொட்டிப் பயனில்லை என ஜனாதிபதி உரை


(கொழும்பு)

வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் தெற்கு மக்கள் பங்களிப்பது அவர்களது கடமையாகும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பணத்தை கோடிகளாகக் கொட்டிக் கொடுப்பதால் மட்டும் அந்த மக்களின் முகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்திவிட முடியாது என சுட்டிக் காட்டியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

# பொட்டு அம்மான் 'குருட்டீ' யாக தமிழகத்தில் மறைந்து வாழ்வு!

## தகவல் வெளியிடுகிறது திவயின



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளராக கடமையாற்றி வந்த சண்முகலிங்கம் சிவசங்கர் எனப்படும் பொட்டு அம்மான் தமிழகத்தில் மறைந்து வாழ்ந்து வருவதாக தென்பகுதி ஊடகமான திவயினவில் செய்தி வெளியிடப்பட்டுள்ளளது.

அதில் மனைவி, பிள்ளையுடன் தமிழகத்தில் பொட்டு அம்மான் குரூ

23ஆம் பக்கம் பார்க்க

# அரசு தருவதை அப்படியே ஏற்பது தியாகங்களுக்கு செய்யும் துரோகம்

## பல்கலையில் பேரா.சிற்றம்பலம் உரை



(யாழ்ப்பாணம்)

எமது உரிமைகளுக்காக எமது மக்கள் கொடுத்த விலை அதிகம், இந்த நிலையில் அரசாங்கம் தரும் தீர்வினை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்வது, அது எங்களது இளைஞர்களது தியாகங்களுக்கும் மக்களது உயிரிழப்புக்களுக்கும் செய்யும் துரோகமாகும் என தெரிவித்து

24ஆம் பக்கம் பார்க்க

# கருகிய நிலையில் 4 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

தெஹிவளை, கவுடான வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து நான்கு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சர்களின் மலசலகூடங்களை விடவும் தமிழ் மக்களின் வீடுகள் தரம் தாழ்வு!

## ஜே.வி.பியின் தலைவர் சாடல்



(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமது வீட்டில் கட்டியிருக்கும் மலசலகூடங்கள் மாதிரியேனும் கூட தமிழ் மக்களின் வீடுகள் இல்லை என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய நல்லிணக்கமும் நாட்டின் எதிர்காலமும் எனும் தொனிப்பொருளில்

23ஆம் பக்கம் பார்க்க

# அரசை எதிர்க்க மேடை ஏறுவேன்

## -மகிந்த

(கொழும்பு)

எப்படியான சவால்கள் வந்தாலும் இன்றைய தினம் கொழும்பில் நடைபெறவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் மக்கள் கலந்து கொள்வார்கள். அதனை எவராலும தடுத்து நிறுத்த முடியாது என முன்னாள் ஜனாதிபதியான நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருட்டுத்தனமாக கடன்பெற்றதாக

23ஆம் பக்கம் பார்க்க

# மின் விநியோகம் இன்று சீராகும்

(கொழும்பு)

இன்று காலை முதல் மின்சார விநியோகம் வழமைக்கு திரும்பும் என்று மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தின் பணிகள் உரிய முறை

24ஆம் பக்கம் பார்க்க

## பனங்கிழங்கில் வாக்குவாதம்

# தங்கையின் கணவர் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு!

(காரைநகர்)

காரைநகர் கல்வன்தாழ்வு பகுதியில் கடந்த 4ஆம் திகதி மண் வெட்டி தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சின்னத்துரை தவமணி தேவி (வயது 56) என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவரைத் தாக்கிய இவரது சகோதரியின் கணவர் தலைமறைவாகியுள்ளார். மேற்படி பெண்ணுக்கும்

23ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டு சம்பவம்

# இளைஞருக்கு பைக் வாங்கி கொடுத்த சித்தி கைதாகி விளக்கமறியலில்!

(யாழ்ப்பாணம்)


வாள்வெட்டு சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் அந்த இளைஞனின் சித்தி (வயது-58) நேற்றைய தினம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தட்டாதெருவில் நடைபெற்ற வாளவெட்டு சம்பவம் தொடர்பிலேயே இக்கைது இடம்பெற்றுள்ளது.

தட்டாதெருவில் அமைந்துள்ள மரக் காலை ஒன்றில் நின்ற இளைஞர்களை மோட்டர் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று நடு வீதியில்

23ஆம் பக்கம் பார்க்க

# நாமலுக்கு டும் டும்!



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரும்

24ஆம் பக்கம் பார்க்க

# விளையாட்டு மைதானத்தில் கொலை; 3 எதிரிகளுக்கு 15 ஆண்டு கடூழியச் சிறை

## நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கைத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செங்குந்தா மைதான கிரிக்கட் வீரர் கிறிஸ்தோபர் பிரேமன் கொலைவழக்கில் 3 எதிரிகளுக்கு தலா 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையுடன் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும விதித்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளார்.

விளையாட்டு மைதானங்களை கொலைக்களமாக்க நினைப்பவர்களுக்கு இத் தீர்ப்பு ஒரு எச்சரிக்கை மணியாக இருக்க வேண்டும் எனவும் தனது தீர்ப்பில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஏழு எதிரிகளில் முதலாம், இரண்டாம், ஏழாம் எதிரிகளான அருளானந்தம் சோபஸ், இராஜகுலேந்திரன் நிசாந்தன், உமாகாந்தன் கிரிகேசன் ஆகிய மூவருக்குமே இவ்வாறு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 4 சந்தேக நபர்களும் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்

24ஆம் பக்கம் பார்க்க

# மின்சார நிலையங்களில் முப்படையின் பாதுகாப்பு

(கொழும்பு))

நாட்டின் அனைத்து மின்சார நிலைய கட்டமைப்புகள் மற்றும் உப மின்நிலையங்களிலும், முப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


நேற்று காலை 6 மணி தொடக்கம் நாட்டின் இராணுவம், கடற்படை, விமானப்படை என்பன அனைத்து மின்சார சபை நிலையங்களிலும பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர இந்தத் தக

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அவுஸ்ரேலிய தூதுவர் குழு யாழ். விஜயம்





(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய நாட்டின் தூதுவர் ப்றிசி டேவிட்கட்ஸிசன் (Bryce david-hutchesson) உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை அவரது அலுவலகத்திலும், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனை யாழ் மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்திலும் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரீன் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள், மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் அவுஸ்ரேலியா அரசாங்கத்தின் ஊடாக வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் கருத்துக்கள் கேட்டறியப்பட்டுள்ளன.

மேலும் இன்றையதினம் வடமாகாண முதலமைச்சரை இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.(செ-9)

# ஹயஸ் வாகனம் தடம்புரள்வு



(கற்குழி)

எதிரே வந்த இரு வாகனங்களுக்கு வழிவிடுவதற்கு முயன்ற ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகேயிருந்த வேலியை ஊடறுத்துக் கொண்டு வயலுக்குள் பாய்ந்து தடம்புரண்டது.

இதில் குறித்த வாகனம் பலத்த சேதமடைந்தது. எனினும் இதன் போது எவருக்கும் உயிராபத்தோ அல்லது படுகாயங்களோ ஏற்படவில்லை.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஓமந்தை புகையிரத நிலையத்துக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் இடைப்பட்ட ஏ9 வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் பேருந்து, டிப்பர் வாகனம் ஆகியவற்றுக்கு வழிவிடுவதற்கு முயன்றவேளை வேகக்கட்டுபாட்டை இழந்த நிலையில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தை அறிந்த ஓமந்தைப் பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்து விசாரணையை மேற்கொண்டனர். அத்துடன் வவுனியா மின்சார சபையினரின் பாரந்தூக்கியின் உதவியுடன்தடம்புரண்டஹயஸ் வாகனம் மீட்டெடுக்கப்பட்டது.(செ-2-281-303)

# நாடு திரும்பினார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று நாடு திரும்பியுள்ளார்.

சிங்கப்பூர் மவுன்ட் எலிசபத் மருத்துவமனையில் இதய சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக சென்றிருந்த ராஜித சேனாரத்ன சிகிச்சை வெற்றியளித்த நிலையில் நேற்று நாடு திரும்பியுள்ளார்.

கடந்த மாதம் 19ஆம் திகதி திடீரென்று மாரடைப்புக்குள்ளான சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் விஷேட விமானம் மூலம் சிங்கபூருக்கு கொண்டு செல்லப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, நாடு திரும்பிய அமைச்சர் அரசியல் நடவடிக்கைகளிலும், தமது அமைச்சு வேலைத்திட்டங்களிலும் வழமை போல ஈடுபடவுள்ளார் என அவரது பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)


யாழ் நகரில் போதனா வைத்தியசாலை முன்பாக

அனைத்து விதமான மருந்து வகைகள்,
முதியோர்களுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள்
( wheel chair, water bad ) போன்றவற்றை
மிகக் குறைந்த விலையில்
ஒரே கூரையின் கீழ் பெற்றிடவும்






தற்போதைய சூழ்நிலைக்கு
ஏற்ற சூரிய மின்கலத்தில் ( SOLAR )
இயங்கும் மின்குமிழ்கள், தொலைபேசி
மின்ஏற்றிகள் (Telephone charger),
Tourch வகைகள் போன்ற மின் உபகரணங்களை
மலிவாக பெற்றுக் கொள்ளலாம்



HEALTHY
CHOICE
MEDICALS
(3920)
ஹெல்த்தி சொய்ஸ் மெடிக்கல்ஸ்
இல.462D, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். T.P – 021 222 4386


# மின்சாரத் தடை ஏற்படுவதற்கு மின்பொறியியலாளர்களே காரணம்

## சதி முயற்சி என்கிறார் விக்கிரமபாகு



(கொழும்பு)

மின்சார தடையானது அரசாங்கத்தின் சதியல்ல. மின்சார சபை பொறியியலாளர்களின் அரசியல் சதி நடவடிக்கையாகும் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார தடை குழப்பத்துக்கு அரசாங்கத்தின் சதி நடவடிக்கையென எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

அரசாங் கம் இவ்வாறான செயலை மேற கொண்டு மக் களை ஒருபோ தும் அசௌகரியத்துக்கு ஆளா க்க விரும்பாது. இதனால் அரசாங்கத்தின் செல்வாக்கே இழக்கப்படும்.


ஆனால் மின்சார தடை தொடர்பாக மின்சார சபை பொறியியலாளர்கள் கூறும் விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் திறமையற்றவர்கள் அல்ல. அவர்களுக்குள் அரசியல் சதிகாரர்கள் இருக்கின்றனர் என்றே நாங்கள் நினைக்கின்றோம்.

எனவே மின்சார பொறியியலாளர்களின் பின்னால் இருந்து அவர்களை யார் வழிநடத்துகின்றார்கள் என்பதை அரசாங்கம் தேடிப் பார்ப்பதுடன் இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் விக்கிரமபாகு கருணாரத்ன. (செ-12)


விற்பனைக்கு
இரண்டு கதவுகளையுடைய
பெரிய குளிர்சாதனப் பெட்டி
விற்பனைக்குண்டு (3916)
தொடர்புகளுக்கு:
0777753261

# குற்றங்கள் இழைத்த எவரையும் காப்பாற்றும் அவசியம் இல்லை

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



குற்றங்கள் இழைத்த எவரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் எமக்கில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு மின்சாரத் தடையை தடுக்க சட்டம் ஒன்றை உருவாக்க திட்டம்

மின்சாரத் தடையை தடுக்க அரசாங்கம் புதிய சட்டமொன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

மின்சாரம் தடைப்பட்டால் அதன் பொறுப்பினை மின் பொறியியலாளர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் விசேட சட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது.

அண்மையில் நாடு முழுவதிலும் இடம்பெற்ற மின் தடைக்கு எந்தத் தரப்பினரும் பொறுப்பினை எற்றுக்கொள்ளவில்லை.

இதனால் மின் பொறியியிலாளாகள் மற்றும் அதிகாரிகள் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சட்டத் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மின்சாரம் தடைப்படுவது குறித்து ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்கள் தலைமையில்அண்மையில்விசேட கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

2002ஆம்ஆண்டில்ஆட்சி செய்த அரசாங்கம் மின்சார புனரமைப்பு சட்டமொன்றை சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருந்தது. எனினும் அந்தச் சட்டத் திருத்தம் அமுல்படுத்தப்படவில்லை.

எதிர்வரும் காலங்களில் மின்சாரம் தடைப்பட்டால் அதற்கான பொறுப்பினை கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டமொன்றை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## மகிந்தவின் வழியில் பயணிக்கும் மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழியில், மைத்திரிபால சிறிசேனவும் பௌத்த இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக ராவய விமர்சித்துள்ளது.

இது குறித்து ராவய பத்திரிகை விசேட செய்திக் கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளது.

கண்டி மாநகரின் தலதா மாளிகை முன்னால் உள்ள வீதி பல நூற்றாண்டுகளாக பொதுமக்களின் பாவனையில் இருந்த வீதியாகும்.

தலதாமாளிகை மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலின் பின்னர் குறித்த வீதி மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கண்டி மாநகரில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன் தினமும் ஏராளமான மனித உழைப்பு நேரம் விரயமாகின்றது.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வர முன்னர் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் குறித்த வீதியைத்திறந்து விடுவதற்குப் பதிலாக தற்போது மகாநாயக்கர்களின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் மாத்திரமே குறித்த வீதியைத் திறந்து விடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக சிறுபான்மை மக்களின் விருப்புகளுக்கு அப்பால் சென்று பௌத்த இனவாதிகள் மற்றும் பௌத்த தீவிர சிந்தனைப் போக்குடைய பிக்குகளைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி தீவிர ஆர்வம் காட்டுகின்றார்.

இவ்வாறு பௌத்த இனவாதிகளுக்குப் பின்னால் அலைந்து, அவர்களை திருப்திப்படுத்த முயற்சித்ததன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த வீடு செல்ல நேரிட்டது என்பதை ஜனாதிபதி மைத்திரிபால இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## மின்சக்தி அமைச்சரின் வெளிநாட்டுபயணத்திற்கு ஜனாதிபதி தடை விதிப்பு

(கொழும்பு)

மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இவ்வாரத்தில் மேற்கொள்ளவிருந்த தனிப்பட்ட ரீதியிலான வெளிநாட்டுப் பயணத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடை விதித்துள்ளார்.

நாட்டுக்குள் மின்தடைப் பிரச்சினையொன்று உருவாகியுள்ள நிலையில் மின்சக்தி அமைச்சர் வெளிநாடு செல்வது உகந்ததல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வமைச்சரிடம் கூறியுள்ளார்.

இதற்கமைய அமைச்சரது வெளிநாட்டுப் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## இருபது கட்சிகளுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

### ஜூன் 6ம் திகதி விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் இனத்துவ மற்றும் வர்க்க அடிப்படையில் செயற்படும் கட்சிகள் காரணமாக அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக கூறி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றம் திகதி குறித்துள்ளது.

இதன்படி இந்த மனு எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் இலங்கை தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொது பல சேனா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, நவ சிஹல உறுமய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட்ட கட்சிகள் இனத்துவ மற்றும் வர்க்க அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## விசேட அதிரடிப்படை அதிகாரி ஆயுதங்களுடன் கைதானார்

### மேலும் மூவருடன்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட்ட நான்கு பேர் நேற்று முன்தினம் பண்டாரகம நகரில் வைத்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கைது செய்யப்படும் போது சொகுசு வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரும் பணி இடைநிறுத்தப்பட்ட விசேட அதிரடிப்படையின் உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடங்கியிருந்தனர்.

பொலிஸ் பரிசோதகர் முன்னாள் அமைச்சு ஒன்றில் பாதுகாப்பு பொறுப்பாளராக செயற்பட்டவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போலி ஆவணங்களுடன் 13யானைக்குட்டிகள் மீட்பு

உரிய அனுமதி பத்திரங்கள் இன்றி பராமரிக்கப்பட்டு வந்த மேலும் 13 யானைக்குட்டிகளை தாம் மீட்டுள்ளதாக சீ.ஐ.டியினர் நேற்று முன்தினம் கொழும்பு சிரேஷ்ட நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சில யானைக்குட்டிகள் தொடர்பில் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

வனவிலங்கு பதிவுப் புத்தகத்தில் மாற்றங்களை செய்து இந்த ஆவணங்களை சிலர் வைத்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த யானைக்குட்டிகள் மீட்கப்பட்டு உடவளவை பரிமாற்ற நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாக சீ.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் யானையை பராமரித்து வந்தால் குடும்பத்துக்கு நன்மை வரும் என்ற அடிப்படையிலேயே பலரும் யானைக்குட்டிகளை அனுமதிப்பத்திரங்களுடன் வீடுகளில் வளர்த்து வருகின்றனர்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இது சட்டவிரோதமான வர்த்தகமாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை தற்போது கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கட்சியின் கடிதத்தை எரித்தோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவினால் கட்சி உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை, ஊடகங்களின் முன்னால் தீக்கிரையாக்கியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள கூட்டு எதிர்க் கட்சிகளின் அரசாங்க எதிர்ப்புக் கூட்டத்தில் எந்தவொரு ஸ்ரீல.சு.க. உறுப்பினரும் கலந்துகொள்ளக் கூடாது எனத் தெரிவித்து கட்சி செயலாளர் சகல உள்ளூராட்சி, மாகாண சபைகள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

சில உள்ளூராட்சி, மாகாண சபை உறுப்பினர்கள் ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்தி அக்கடிதங்களை ஊடகங்களின் முன்னால் நேற்று முன்தினம் தீயிட்டு எரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இலங்கைக்கு ஆலோசனை வழங்க சங்கா இந்தியாவுக்கு அனுப்பி வைப்பு

## கிரிக்கெட் சபை அதிரடி



இலங்கை அணியின் இரண்டு தூண்கா ளாக விளங்கிய ஜெயவர்த்தனவும், குமார் சங்ககாரவும் ஓய்வுபெற்ற பிறகு அந்த அணி நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறி வருகிறது.




சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான இருபது- 20 தொடரை 2-1 என்ற கணக்கில் இழந்தது. இருபது-20 ஆசியக் கோப்பை தொடரில் பங்காளதேஷைக்கூட தோற்கடிக்க முடியாமல் அவமானப்பட்டது.

இந்நிலையில் இருபது-20 உலக கோப்பையின் சுப்பர் 10 ஆட்டங்கள் முந்தினம் தொடங்கியுள்ளது. இன்று கொல்கத்தாவில் நடைபெறும் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது இலங்கை.

தன்னம்பிகை இழந்து தடுமாறிவரும் இலங்கை அணிக்கு ஆலோசனை வழங்கவும், ஊக்கமளிக்கவும் குமார் சங்ககாரவை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. (க)

# கெயில் அபார சதம் மே.தீவுகள் வெற்றி

கிறிஸ் கெயிலின் அதிரடியான சதம் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான உலக கோப்பை இருபது-20 போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




இருபது-20 உலகக் கிண்ண லீக் போட்டியின் 3-வது போட்டி நேற்று மும்பையில் நடைபெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் ரூட் 48 ஓட்டத்தினையும், பட்லர் 30 ஓட்டத்தினையும், மோர்கன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் 183 ஓட்டகள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 18.1 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக கலக்கிய கெயில் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டத்தினை பெற்று போட்டியின் ஆட்டநாயகன் விருதினையும் தட்டிச் சென்றார். (க)

# அப்ரிடி சகலதுறையிலும் கலக்க பங்களாதேஷை வென்றது பாகிஸ்தான்




பங்களாதேஷ் அணிக்கு எதிரான உலகக் கிண்ண இருபது-20 லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் 55 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

உலகக்கிண்ண இருபது-20 தொடரில் பாகிஸ்தான்- பங்களாதேஷ் அணிகள் நேற்று மோதிய லீக் போட்டி கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக சர்ஜல், ஷேஷாட் கள மிறங்கினர்.

சர்ஜல் 18 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, நிதானமாக ஆடிய ஷேஷாட் (52) அரை சதம் கடந்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த அப்ரிடி, ஹபீஸ் பங்களாதேஷ் பந்துவீச்சை பிரித்து மேய்ந்தனர்.

ஹபீஸ் 42 பந்தில் 64 ஓட்டங்களும் (7 பவுண்டரி, 2 சிக்சர்), அப்ரிடி 19 பந்தில் 49 ஓட்டங்களும் (4 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்தனர்.

உமர் அக்மல் (0) நிலைக்கவில்லை. மலிக் (15), இமாட் வாசிம் (0) ஆட்டமிழக்காமல் களத்தில் இருக்க, பாகிஸ்தான் 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 201 ஓட்டங்களை குவித்தது.

பங்களாதேஷ் அணி தரப்பில், டஸ்கின், அரபட் தலா 2 விக்கெட்டுகளையும், சபீர் ரஹ்மான் 01 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 202 ஓட்டங்களை இலக்காக கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் பந்துவீச்சில் திணறியது.

விக்கெட்டுகளை சீரான இடைவெளியில் இழந்த பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கு 146 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

இதனால் பாகிஸ்தான் அணி 55 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக சாகிப் அல் ஹசன் 50 ஓட்டங்கள் எடுத்தார். தமீம் இக்பால் 24, சபீர் 25, முஸ்பிஜுர் ரஹ்மான் 18 ஓட்டங்களை எடுத்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் அப்ரிடி, அமீர் தலா 2 விக்கெட்டும், இமாட், இம்ரான் தலா 01 விக்கெட்டும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டம், பந்துவீச்சிலும் அசத்திய பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஆசியக்கிண்ண தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது. (க)



# பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்க கோருகின்றார் அமைச்சர் சஜித்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டை அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளும் முயற்சிக்கு சகலரது ஒத்துழைப்புகளும் அவசியம் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்கத்திற்கு ஆதரவான பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களின் நிலைப்பாடுகளை மதித்து நாட்டை அபிவிருத்தி செய்ய இடமளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

ராஜபக்ஷவினரும், அவரை சுற்றியிருப்பவர்களும் தற்போதைய அரசாங்கம் நாட்டில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி மற்றும் சமூக கலாசார முன்னேற்றத்திற்கு தடையேற்படுத்தி வருகின்றனர்.

நாட்டை புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற போது திறைசேரியின் கஜானா காலியாக இருந்தது. ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டை கடன் பொறியில் சிக்க வைத்திருந்தது எனவும் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார். (இ-5)

## ஹெரோயின் போதைவஸ்துக்கு அடிமைப்பட்டவர்

# கொழும்பில் 14 ஆட்டோக்களைத் திருடி விற்பனை செய்த பலே ஆசாமி மாட்டினார்

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் புறநகர் பகுதிகளிலும் 14 ஆட்டோக்களைத் திருடிய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கிரிபத்கொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடிய ஆட்டோ ஒன்றிலிருந்த வானொலி ஒலிப்பதிவு உபகரணத்தை விற்பனை செய்ய முயன்ற போது சந்தேகமடைந்த பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டார். பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளிலேயே 14 ஆட்டோக்கள் திருட்டுப்போன சம்பவத்திற்கும் மேற்படி நபருக்கும் தொடர்பிருப்பதைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இவ்வாறு திருடப்பட்ட ஆட்டோக்களின் உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கொழும்பிலும் புறநகர்ப்பகுதிகளிலும் உரிமையாளர்களினால் வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் 14ஆட்டோக்களைத் திருடியதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அத்துடன் பெருந்தொகையான பற்றரிகள், ரயர்கள், வானொலி ஒலிப்பதிவுக் கருவிகள், ஆட்டோக்களில் பொருத்தப்படும் பக்கக் கண்ணாடிகள் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதுடன் ஆட்டோக்களின் ஏனைய உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், சந்தேக நபர் மது போதைக்கு அடிமையானவர் என்றும் ஹெரோயின் போதைப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கான பணத்திற்காக திருட்டுத் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# கர்ப்பிணிப் பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம்

## மற்றுமொரு சந்தேக நபர் கைது

பொறளை வெலிக்கடை சிறைச்சாலை பிரதேசத்தில் வைத்து கடந்த சில வாரங்களுக்கு முன் கர்பபிணிப் பெண் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேக நபர கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வயதான குறித்த சந்தேக நபரை மாத்தறை சிறைச்சாலை சுற்றுவட்ட பாதையில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர் மாத்தறை, நாவிமன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த நபரிடமிருந்து 9 மில்லி மீற்றர் வகை துப்பாக்கியுடன் 10 ரவைகளையும் பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-5)


## வேலையாள் தேவை

எமது அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த புத்தகம் கட்டுநர், பெண் பிள்ளைகள் தேவை. பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**மேனகா பிறிண்டேர்ஸ்**
**367, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**(கதிரேசன் கோவில் அருகாமை)**
(3837) **தொ.பே : 021 222 9468**


## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை சிவயோகன் என்பவருடைய 603281390X எனும் இலக்கமுடைய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : 077 692 5819**
(சி-4035)


விளம்பரத் தொடர்புகளுக்கு
Valampuriadd@sltnet.lk
0212217603 5



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

Viber

நீங்கள் அறிந்த

- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்




Viber

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல.

076 636 3378



## கிருஷ்ணா அடகு சேவை
## பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு (31.12.2014) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.04.2016) ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015 ஆம் ஆண்டு (31.09.2015) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.04.2016) ஆம் திகதி அன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

உரிமையாளர்: A.S.Surendran
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(சி/4001)


# இராசி பலன்

17.03.2016
(பங்குனி 04, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
நவமி பிற்பகல் 2.24 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.21 மணிவரை
சுபநேரம் 7.49-9.19 மணிவரை
இராகுகாலம் 1.49-3.19 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | | சந் | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

### மீனம்
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

### மேடம்
சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

### இடபம்
பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், போசன சுகமுண்டு.

### மிதுனம்
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும்.

### கும்பம்
நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

### கடகம்
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், புதிய முயற்சிகளை யோசித்துச் செய்வது நல்லது.

### மகரம்
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

### சிம்மம்
இல்லத்தல் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

### தனுசு
நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், சுற்றத்தாரின் வரவால் சுகம் காணும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு.

### விருச்சிகம்
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

### துலாம்
தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

### கன்னி
கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உங்களின திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.





நாகர் கோவில் அ.மி.த.க பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. அதிபர் செல்வச் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். (படங்கள் :-கரணவாய் செய்தியாளர்)

# நாகரிக போதையால் எங்கள் பண்டைய கலைத்துவ அம்சங்கள் கரைந்து போகும் நிலையை மாற்ற வேண்டும்

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

எமது முன்னோர்களால் கட்டிக் காப்பாற்றும் கலை என்னும் கோட்டையை நாங்களும் பலப்படுத்த வேண்டும். நாகரிக போதையால் எங்கள் பண்டைய கலைத்துவ அம்சங்கள் கரைந்து போகும் நிலையை மாற்ற வேண்டும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய 2016ஆம் ஆண்டுக்கான நாத நர்த்தன வர்ணம் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தலைமை உரையாற்றுகையிலே மேலும் தெரிவித்தார்.

எமது வலயம் முன்னெடுத்து வரும் வருடாந்த கலை வேள்வியில் நாத நர்த்தன வர்ணத்தின் இரண்டாவது வேள்வியை நாம் இன்று நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

பழந்தமிழர் எம் சாஸ்திரீகக் கலைகளில் ஒன்றான பரதநாட்டியக்கலையானது எமது கலாசாரத்தின் தொன்மையினை,மகிமையினை, அருமை பெருமைகளை, தெய்வீக மேம்பாட்டினை உலகத்திற்கு எடுத்துக்காட்டி நிற்கும் ஒரு உன்னத ஊடகமாக அமைந்திருக்கின்றது

உலகின் உன்னதமான தத்துவக்குறியீடுகளில் ஒன்றாக போற்றப்படும் நடராஜத் திருவுருவை நாட்டியக்கலையின் ஒப்பற்ற திருவுருவாகவும் எடுத்துக்காட்டுவதுண்டு. நடனக்கலையில் இடம் பெறும் 108 தாண்டவ மூர்த்திகளையும் நாட்டிய உலகு நடராஜர் என்ற நாமத்தால் அழைத்து நிற்பது நாட்டியத்தின் மேன்மைக்கு சான்றாகிறது.தமிழர் எம் பண்டைய வரலாற்றுக் குறிப்புக்களில் தமிழர்கள் நாம் இயல் , இசை ,நாடகம் ஆகிய கலைகளில் சிறப்பிடம் பெற்றவர்களாக விளங்கினோம் என்பதற்கான பல ஆதாரங்களை இன்றும் உலகிற்கு சான்று கூறி நிற்கின்றன.

கோயில் கோபுரங்களும் இலக்கியங்களின் பக்கங்களும் இவற்றை வெளிக்காட்டியபடி உள்ளன. எனவே எமது முன்னோர்களால் கட்டிக்காப்பபற்றப்பட்ட கலை என்னும் கோட்டையை நாங்களும் பலப்படுத்தவேண்டும். நாகரிக போதையால் எங்கள் பண்டைய கலைத்துவ அம்சங்கள் கரைந்து போகும் நிலையை மாற்றவேண்டும்.

தென்மராட்சி மண் கல்வியிலே ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து எமது இனத்தின் தலைவாசலில் நின்றபடி தெளிவான ஒரு இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.நேற்று வரை பார்வையாளராக நின்ற பலரும் இன்று எங்களுடன் இணைந்து எங்கள் பாரத்தை சுமக்கும் பங்காளர்களாக மாறி எம்மைப்பலப்படுத்தி வருகின்றனர்.

இது எங்களை பெருமை கொள்ள வைப்பதுடன் ஒரு சிறிது தயக்கத்தையும் எம்முள் தோற்றுவிக்கின்றது. இருந்தும் அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் கொண்ட எமது பணியாளர்களது ஒவ்வொரு காலடிகளும் வெகு நிதானமாக முன்வைக்கப்பட்டு நகரும் போது எம்மிடையே எழும் தயக்கமும் பயமும் கதிரவனைக்கண்ட பனி போல மறைந்து போய் விடுவதான அனுபவங்களாகவே எம்மிடம் எஞ்சி நிற்கின்றன.

இன்றும் கூட அத்தகைய அனுபவத்தை தரத்தயாராக இங்கே இந்த மேடை விரிந்து கிடக்கிறது. ஆற்றல் கொண்ட பயிற்சி கண்ட பாதங்களும் எங்களை மகிழ்விக்க தயாராக காத்துக் கிடக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

கலைகளும் காவியங்களும் கவிநூறு கதை கூறும் பாரீர்" என்ற கோட்பாட்டுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிறீ தரன் கலந்து கொண்டதோடு சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியர் கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக நடனத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆனந்தஜோதி தர்சனன் மற்றும் வட மாகாண கல்வித்திணைக்கள அழகியல் பிரிவு ஆசிரிய வளவாளர் திருமதி விக்னராஜா கலந்து சிறப்பித்ததோடு மாணவர களின் பல்தரப்பட்ட நடன ஆற்றுகைகளும் இடம்பெற்றதுடன் தென்மராட்சி வலயப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,கலைத்துறை சார்ந்த விற்பன்னர்கள் எனப்பெருந்திரளானோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குருபூசைத்தினப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் குருபூசைத் தினப் போட்டிகள் எதிர்வரும் 09.04.2016 சனிக்கிழமை, 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் பருத்தித்துறை, தம்பசிட்டி, கதிரைவேற்பிள்ளை வீதியிலுள்ள சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவுப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை மூலமாகவோ அல்லது மேற்படி சனசமூக நிலையத்திலோ பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால்மூலமாகவோ அல்லது நேரிலோ செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

வடமாகாண ரீதியாக நடத்தப்படும் திறந்த கட்டுரைப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் உட்பட விரும்பிய அனைத்து வயதினரும் பங்குபற்ற முடியும்.

கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு,

சைவத்தமிழ் மலர்ச்சிக்கு சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையவர்களின் பங்கு, அந்நிய நாகரிக மோகமும் தமிழர் தம்பண்பாடும், பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும், சமூக நலனுக்கு சவாலான போதைப்பொருட் பாவனை, பண்டைத்தமிழர் வாழ்வியலின் சிறப்பு.

கட்டுரைப் போட்டிக்கான அறிவுறுத்தல்கள்

◆ஏ4 தாளில் 1000-1250 சொற்களுக்கு மேற்படாது கட்டுரை அமைதல் வேண்டும்.

◆ஆக்கங்கள் அழகான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது அச்சுப் பிரதியாகவோ அமைய வேண்டும்.

◆.போட்டியாளர் பெயர், முகவரி, தொலை.பே.இலக்கம் என்பன தெளிவாக தனியொரு தாளில் பிரதி செய்யப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும்.

◆கட்டுரை சொந்த ஆக்கமாக அமைதல் வேண்டும்.

◆போட்டியில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

கட்டுரைகள் யாவும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

◆வெற்றியீட்டும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும் சதாவதானியின் 109 ஆவது ஆண்டு விழாவில் (16.04.2016 சனிக்கிழமை) வைத்து வழங்கி கௌரவிக்கப்படும் என சனசமூக நிலைய தலைவர் அறிவித்துள்ளார். (இ-5)

# கதக் நடனம் கற்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத்தூ தரகமானது இல.14 மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தூதரக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய கலைக்கூடத்தில் கதக் நடனம் (Kathak Dance) கற்க ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

புதிய பிரிவுகள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி பாடநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் கீழே கேட்கப்பட்டுள்ள விபரங்களை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 021 222 0503 எனும் தொலை நகல் இலக்கத்திற்கு மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

பெயர் மற்றும் வயது, மேலதிக தொடர்புகளுக்கான உங்கள் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பவும். (இ






வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை சம்பத்வங்கி மூலம் பெற்றுக்கொள்பவர்களுக்கிடையே நடைபெற்ற குலுக்கல் முறைத் தெரிவில் சம்பத் வங்கி சுன்னாகம் கிளையில் வெளிநாட்டுப் பணத்தினைப் பெற்றுக்கொண்ட தெல்லிப்பழையினைச் சேர்ந்த திருமதி. சந்திராதேவி சிவஞானம் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான பரிசினை சம்பத் வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளர் ச.சுரேஸ்குமார் வழங்கினார்.

# பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்

கலைமாணி (பொது), வணிகமாணி, வியாபார முகாமைத்துவமாணி, பட்டக்கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான் றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ

# மகாபாரதம் தொடர் பேருரை

கோப்பாய் தெற்கு பழைய வீதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் மகாபாரதம் எனும் தொடர் பேருரை இடம்பெற்று வருகிறது. (இ

# கருத்தரங்கு

கிராமிய சமூக குழுவினர் வழி நடத்தும் கருத்தரங்கு நாளை பிற்பகல் 2.30 மணிக்கு மணியகாரன் தோட்டம் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-60)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டைப் பலப்படுத்துங்கள்

## நிபுணர் குழுவிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு என்ற பலமான நிலைப்பாட்டினையும் உணர்வையும் மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதுடன் பக்கச்சார்பான அரசியல் பிடியில் இருந்தும் நாடு விடுபட்டுள்ளது. ஆகவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை உருவாக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பு திருத்தும் தொடர்பில் மக்களின் கருத்தறியும் நிபுணர் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் நிபுண்ர் குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து தமது யோசனைகளை பெற்றனர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் இந்த சந்திப்பு ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

அதன்போதே ஜனாதிபதி கருத்தறியும் நிபுணர் குழுவிடம் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.02

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 2 | 21) 1 | 31) 3 |
| 02) 4 | 12) 3 | 22) 3 | 32) 1 |
| 03) 3 | 13) 1 | 23) 2 | 33) 3 |
| 04) 3 | 14) 3 | 24) 3 | 34) 2 |
| 05) 1 | 15) 3 | 25) 2 | 35) 1 |
| 06) 3 | 16) 2 | 26) 3 | 36) 1 |
| 07) 2 | 17) 2 | 27) 1 | 37) 1 |
| 08) 1 | 18) 2 | 28) 2 | 38) 2 |
| 09) 3 | 19) 2 | 29) 2 | 39) 1 |
| 10) 3 | 20) 3 | 30) 3 | 40) 3 |

★ பகுதிII க்குரிய மாதிரி வினாத்தாள் நாளைய வலம்புரிப் பத்திரிகையில் (18.03.2016) பிரசுரமாக்கப்படும்.

# யாழில் சுகாதாரத் தொண்டர்கள் நேற்று இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்




(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றிய சுகாதார தொண்டர்கள் தாம் பணியிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் ஆறாவது நாளாகவும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தோடு இரண்டாவது நாளாக உண்ணாவிரத போராட்டத்தையும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்றலில் மேற்கொண்டனர்.**

காலை 9 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இந்த போர்ராட்டத்தின் போது பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் யாழ்.மாநகர சபையின் சுகாதார தொண்டர்கள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த இரு வருடங்களுக்கும்.எட்டு வருடங்களுக்கு முன்னதாகவும் இணைத்துக் கொள்ளப்படும் போது நிரந்தர நியமனம் தருவதாகவே கூறி இணைத்து கொண்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் எவ்வித முன்னறிவிப்பு இன்றியும் தாம் பணியிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டதாக கூறும் தொண்டர்கள், இடைநிறுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. இதுவரை இந்த காலப்பகுதியில் கொடுப்பனவு எவையும் இன்றியே நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.

இந்த போராட்டத்தில் யாழ்.பிராந்திய சுகாதார பணிமைனையை சேர்ந்த 22 பேரும், யாழ். மாநகர சபையை சேர்ந்த 28 பேரும், தெல்லிப்பழை வைத்திய சாலையை சேர்ந்த 33 பேரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், முன்னுரிமை அடிப்படையில் நியமனம் என கூறி ஏமாற்று வேலை செய்கின்றார்கள், 16 வருடம் ஏமாற்றியது போதும் போதும், எமக்கு நியாயம் வேண்டும், நிரந்தர நியமனம் கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும், ஊதியமின்றி பணியாற்றுகின்றோம் இரக்கமில்லையா?, மத்திய அரசு வழங்குவதாக கூறுகின்றனர் .ஆனால் மாகாணம் ஏன் மறுக்கின்றது? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மேலும் எமது குறித்த தொண்டர்களது நியமனம் குறித்து சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனது கவனத்திற்கு கடந்த வருடம் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது,

இதனை அவர் மத்திய சுகாதார அமைச்சருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சு இது தொடர்பில் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்து நிரந்தர நியமனம் வழங்குமாறு அறிவுறுத்தி மத்திய அமைச்சின் செயலாளரினால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு இருந்தது.

எனினும்வடக்கு மாகாண சுகாதார அமைச்சு இது வரை எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இறுதியாக நடைபெற்ற ஆட்சேர்ப்பின் போது 180 நாட்கள் பணியில் ஈடுபடாதவர்களுக்கும் செல்வாக்கின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டும் அவர்கள், தமக்கான நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர். (இ-4)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம் கேட்டை<br>கி.பா:25<br>உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5632 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 35 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:BBA, BIT<br>தொ.இ: G/5668 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 34<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/5633 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 21செவ் 7 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில் :BSc IT/ பொறியியலாளர்<br>தொ.இ: G/5671 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 72 செவ் 12 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:BSC/லண்டன் NOT PR<br>தொ.இ: B/5635 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20 செவ் 2 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில் :BSc, MSc/ விரிவுரையாளர்.<br>தொ.இ: G/5673 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 56 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:A/L இத்தாலிPR<br>தொ.இ: B/5636 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 42 செவ் 8 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில் :BCS/தனியார் தொழில்<br>தொ.இ: G/5675 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### உயிர் விலை கொடுத்து காப்பாற்றிய எமது கலாசாரத்தை அழிக்க சதி

# போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ் மக்கள் திடசங்கற்பம் பூண வேண்டும்

## சிறீதரன் எம்.பி.உருக்கமாக வேண்டுகோள்

**போருக்குப் பின்னரான சூழலில் எம் மக்களின் வறுமை, இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை போன்றவற்றை சாதகமாகப் பயன்படுத்தி போதைப் பொருள் வியாபாரிகளாகவும் தரகர்களாகவும் பலரை உருவாக்கியுள்ளனர். இதை விட சிறுமிகள் மீதான வன்கொடுமைகளும் இடம்பெற்று வருகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. உயிர் விலை கொடுத்து எம்மவர்களால் காப்பாற்றப்பட்ட கலாசார அம்சங்கள் சிதைக்கப்பட்டு வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.**

முரசுமோட்டை ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மாதர் சங்க பொருளாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,


சுதந்திரத்துக்காக ஏங்கிய மக்கள் அதற்காக பல விலைகளை கொடுத்துள்ளனர். சுதந்திரப் போராட்டத்தின் மௌனிப்புக்குப் பிறகும் உயிர்கொடைகளுக்குப்பிறகும் தங்கள் மண்ணில் தமக்கேயுரிய தனித்துவ கலாசார அம்சங்களோடு கூடிய வாழ்க்கையைத் தொடர்கின்றபோது அவ் வாழ்க்கைமுறைகளை சீரழிப்பதில் பலர் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள். தமிழ்க்கலாசாரத்தை சிதைத்து தமிழ் இனத்தின் தனித்துவங்களை அடியோடு அழித்து உலக அரங்கிலே எம்மினம் பற்றிய இழிநிலையை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை மிகக் கச்சிதமாக அரங்கேற்றி வருகின்றார்கள்.

போர் உக்கிரமடைந்த வேளையில் கூட தலை நிமிர்ந்து எதிர்கொண்ட நாம் இப்பொழுது மெல்ல மெல்ல கலாசார அழிவுகளில் இருந்து மீண்டெழ முடியாமல் தவிக்கிறோம்.

பத்திரிகை பக்கங்களை புரட்டுகிற போது யாழ். குடாநாடு உட்பட தமிழர் பிரதேசங்கள் போதைப்பொருள் கடத்தல்களில் முன்னணி பெற்று நிற்கின்ற செய்திகளையே நாளாந்தம் காண்கிறோம்.

இந்த நிலை மாற வேண்டும். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற வீர வாசகத்தை மகுட மாக கொண்டு எங்கள் இனத்தின் முன்னால் உள்ள அனைத்து தடைகளையும் தகர்த்து கலாசார சீரழிப்புகளுக்கும் போதைப் பொருள் பாவனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க தமிழர்கள் திடசங்கற்பம் பூண வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (2)

## பேசாலை முருகன் கோவில் பகுதியில் பேருந்து நிழற்குடை திறந்து வைப்பு



(மன்னார்)

மன்னார் பேசாலை முருகன் கோவில் பகுதியில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரினால் அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடை கடந்த 14 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அங்கு கடந்த ஆண்டு கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு வழங்கப்பட்ட அரைக்கும் ஆலை வினைத்திறனுடன் இயங்கும் நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் அதனையும் பார்வையிட்டதோடு, கிராமத்து மக்களுடன் அவர்களது தேவைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சட்டத்தரணி பிரிமுஸ் சிறாய்வா, மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்த குமார்,மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி. உள்ளூராட்சிஉதவிஆணையாளர் எம்.ஏ.துரம், மன்னார் பிரதேச சபையின் செயலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார் மாவட்ட பொறியியலாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-3-4)

## வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளதாக சங்கத்தின் உப செயலாளர் க.மனோகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கு நடப்பாண்டில் சங்கத்தின் பதிவிலுள்ள பேருந்து உரிமையாளர்கள் மட்டும் சமூகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## மக்களின் பாவனைக்கு மயானம் கையளிப்பு



(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பாராளுமன்றம் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் திருமுறிகண்டி வசந்தநகர் பகுதியிலுள்ள மயானம் இளைஞர்களின் பங்களிப்புடன் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ.சுஜிதரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்மற்றும்விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டு உத்தியோக பூர்வமாக மயானத்தை மக்களிடம் கையளித்தனர். (2-3-281)

### மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு த.தே.கூட்டமைப்பினர் ஒத்துழைக்க வேண்டும்

## நுகர்வோர் பாதுகாப்பு வார தேசிய நிகழ்வில் அமைச்சர் றிசாட் பதியுதீன்

(கற்குழி)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் உள்ளது.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தேசிய நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தேசிய நுகர்வோர் பாதுகாப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா காமினி மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நுகர்வோரை அரசு எவ்வாறு பாதுகாக்கிறது என்பதை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு வாரம் ஒழுங்கு செய்யப்பட்டது.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு கூறிய வாக்குறுதிகளின் அடிப்படையில் தான் நாம் செயற்படுகிறோம். 6 ஆயிரம் கடைகளில் ஆயிரம் பொருட்களின் விலைகள் குறைப்பு செய்யப்பட்டுள்ளன.

நுகர்வோரை அரசு பாதுகாக்கும். எவரும் தம் இஷ்டப்படி விலையை அதிகரிக்க முடியாது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைக்க வேண்டும். காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளம் என்பன மீள கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இதனை செய்தால் எமது இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பு பெறுவார்கள். இதற்காக வெகு விரைவில் ஆலோசனை சபை ஒன்றினை உருவாக்கும்எண்ணம் இருக்கிறது. உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் எமது ஆட்சிகாலத்தில் இதனைச் செய்து முடிப்பேன் என்றார். (2-3-303)

# வெடித்ததோ வெங்காய வெடி அடைந்ததோ மனப்பதற்றம்

### வவுனியா பொலிஸ் நிலையத்தில் சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் நிலையத்தில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்ட மிருக வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் வெங்காய வெடியே பொலிஸ் நிலைய வளாகத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை வெடித்துள்ளது. இதனால் வவுனியா நகரப் பகுதியில் பதற்றம் காணப்பட்டதுடன் மக்கள் பொலிஸ் நிலையம் முன்பாக திரண்டனர். எனினும் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, பொலிஸ் நிலைய கட்டடம்ஒன்றின்வெளிப் பகுதியில் குறித்த வெடிப்பு சம்பவம் இடம் பெற்றமையால் எந்தவித பாதிப்புக் களும் இடம்பெறவில்லை என பொலிஸ நிலைய வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது. (2-3-250)




# கடலட்டை வளர்ப்பு பண்ணையை அகற்றுக! பூநகரியில் குடும்பம் ஒன்று உணவுத் தவிர்ப்பு

### விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க பிரதேச செயலர் பணிப்பு

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கிராஞ்சி இலவங்குளம் பகுதியில் கடல் அட்டைவளர்ப்பு பண்ணை அமைக்கப்பட்டமையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் இதனால் குறித்த பண்ணையை அகற்றக்கோரி அப்பகுதியை சேர்ந்த குடும்பம் ஒன்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

பாடசாலை செல்லும் சிறார்கள் நால்வரும் அவர்களைப் பெற்றோரும் இணைந்து நேற்று முன்தினம் குறித்த உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளனர். தமக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிட போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த பகுதியில் இயற்கையாக கடலட்டை வளர்வதாகவும் இதனால் அங்கு பெண்கள் பகுதி நேர தொழிலாக கடலட்டை சேகரிப்பதாகவும் இப்பண்ணை அமைக்கப்பட்டமையினால் தமது தொழிலை முன்னெடுத்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்நிலையில் பிரதேச மக்களின் தொழிலை பாதிக்கும் குறிதத பண்ணையை அங்கிருந்து அகற்றி மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழியமைகக்கோரிஉணவுதவிர்பை இந்த குடும்பம் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பூநகரி பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு வினவியபோது,

மீனவர் சங்கங்களின் சிபார்சின் படியே கடலட்டை வளர்ப்பு பண்ணை அமைக்கப்பட்டது.

எனினும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவரின் குடும்பம் இவ்வாறுஉணவுதவிர்ப்பில் ஈடுபடுவது பொருத்தமற்றது.


எனினும் உணவு தவிர்ப்பில் ஈடுபடும் சம்பவம் தொடர்பாக அறிந்து கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அங்கு நேற்று முன்தினம் அனுப்பி அவர்களது நிலைப் பாடுகளை அறிந்துள்ளேன். அத்துடன் கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் மற்றும் கடற்றொழில திணைக்கள அதிகாரிகளை இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்த அறிக்கைக்கு ஏற்ப இது விடயத்தில் மாற்றங்கள் ஏற் படுத்தப்படும்என்றும்அவர்மேலும் தெரிவித்தார்.(2-3-250-311-281)

அரச ஊழியர்கள்#வீட்டுத்திட்டம்#குற்றச்செயல்#துஷ்பிரயோகம்#ஒரு மாத கால அவகாசம்

# ஒரு மாத காலத்திற்குள் வீடுகளில் குடியமருங்கள் இல்லாவிடின் அவை அரச உடைமைகளாக்கப்படும்

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு





(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் பனிக்கன்குளம் கிராமத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கென வழங்கப்பட்ட காணிகள் துப்புரவு செய்யப்பட்டு அதில் கட்டப்பட்ட வீடுகளில் பயனாளிகள் குடியமரவேண்டும்.இல்லையேல்,காணிகள் அரசுடைமையாக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இங்கு குடியேறாததன் காரணமாக பல்வேறு குற்றச் செயல்கள்,பாலியல் துஷ்பிரயோகங்கள் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு ஏதுவான இடமாக மாறி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் குறித்த வீட்டுத்திட்டம் பயனாளிகளுக்கான விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குள கிராமத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கென வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் இலவசமாக காணி வழங்கப்பட்டு வீடு அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா மானியமாகவும் இரண்டு இலட்சம் ரூபா கடனாகவும் நிதி வழங்கப்பட்டு 50 பேர் குறித்த பகுதியில் வீடுகளை நிர்மாணித்தனர்.

நாங்கள் அண்மையில் நேரில் சென்று அந்த இடத்தை பார்வையிட்டோம். அழகாக வீடுகளை அமைத்திருக்கிறீர்கள். உங்களுக்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மின்சார வசதி, வீதிகள் என்பன முழுமையாக மேற்கொள்ளப்படாவிட்டாலும் நீங்கள் குடியிருந்தால் அதனை செய்து தர முயற்சிக்கலாம். அதைவிட குடிநீர் வசதி உட்பட அவ்விடத்தில் வசிக்கக்கூடிய சூழல் காணப்படுகின்றது. ஆனால் தனியாக ஒரு குடும்பம் அங்கு வசிக்க முடியாது என்பது உண்மை. ஏனெனில் தனியொரு குடும்பம் இருந்தால் பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும்.எனினும் சில வீடுகளில் குடியேறி பின்னர் தனியாக இருக்க முடியாத காரணத்தால் வெளியேறியமையையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இந்த இடத்தில் வீட்டுத்திட்டத்தை பெற்றவர்கள் சிலர் வேறு இடங்களில் ஏனைய வீட்டுத்திட்டங்களை பெற்றிருப்பதாகவும் அறியவருகின்றது.

உத்தியோகத்தர் என்பது மாவட்ட செயலாளரும் பிரதேச செயலாளரும் மட்டுமல்ல நீங்களும் தான். எனவே உங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில் சமூக சீர்கேட்டுச் சம்பவம் இடம்பெறுகிறது எனின் நீங்கள்தான் அதற்கு பொறுப்பாளிகள் என்பதோடு அவ்வாறான செயற்பாட்டிற்கு தூண்டுகோலாக அமைகிறீர்கள் என்று தான் நான் கூறுவேன். எனவே அந்த வீட்டில் நீங்கள் இருக்க வேண்டும் அல்லது அந்த வீட்டினை நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும். முடியாவிட்டால் வீடு தேவையில்லை எனில் வீட்டினை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை காணி இல்லாமல் வீடு இல்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த காணிகளை வழங்க முடியும். இவ்வாறிருக்க அரச அதிகாரிகளான நீங்கள் வேறு இடங்களில் காணிகளை வைத்துக் கொண்ட வீட்டுத்திட்டத்தையும் பெற்றுக் கொண்டிருக்க தேவையில்லை. தேவையற்ற ஒரு விடயமாக இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவே எனக்கு தெரிகிறது.

இதை விட அபிவிருத்தி முழுமையாக்கப்பட்டால் தான் குடியிருப்போம் என்று கூற முடியாது. நீங்கள் குடியிருந்தால் மட்டுமே தேவையான அபிவிருத்திகளை செய்துதரமுடியும்.

உங்களுக்காக வழங்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள் காணிகளில் குடியிருக்க வேண்டும். இல்லையேல் எங்களால் இருக்க முடியாது என்பதை தெரிவித்து எனக்கு காணி வேண்டாமென்று எழுதித் தந்து விட்டு செல்லுங்கள் என தெரிவி த்தார். இவ்வாறு ஒரு மாத காலத் துக்குள் துப்புரவு செய்த குடியி ருக்காத காணிகள் அரச உடைமையாக் கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை காணி உரிமையாளர்களால் கூறப்பட்ட சில குறைபாடுகளையும் கேட்டறிந்த அரச அதிபர், நீங்கள் குடியமருங்கள் படிப்படியாக வசதிகளை செய்து தருகிறோம் என தெரிவித்தார்.

அத்தோடு இங்கு காணிகளை பெற்று வீடு கட்டியவர்கள் வேறு இடத்தில் வீட்டுத்திட்டம் பெற்றிருந்தால் இந்த திட்டத்தை அவர்களுக்கு இரத்து செய்வதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பதினைந்து நாட்களின் பின்னர் இந்த நடவடிக்கை எவ்வாறு செயற் படுத்தப்படுகிறது என ஆராய்வதற்கு மீண்டுமொரு கலந்துரையாடல் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (2-3-281)



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்திலுள்ள பொது நோக்கு மண்டப வளாகம் கடந்த 14 ஆம் திகதி மேற்படி கிராம சமுர்த்தி சங்கத்தினரால் துப்புரவு செய்யப்பட்ட போது... (படம்:-வற்றாப்பளை செய்தியாளர்)

# துணுக்காய் வலய தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(மல்லாவி)

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற வலய மட்ட எழுத்தாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய,

**பிரிவு-I**

**ஆக்கம் எழுத்துப் போட்டி**

ந.பிறைவிழி (மு/அனிஞ்சியன் குளம் தமிழ்க்கலவன் வித்தியாலயம்), வ.அபிசன் (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்) , வா.வரசிகா (மு/ஆறுமுகம் வித்தியாலயம்).

**பிரிவு-II**

**கட்டுரை வரைதல்**

செ.சஞ்சிகா(மு/கல்விளான்குளம் அ.த.க. பாடசாலை), ப.தனு சிகா(மு/ விநாயகபுரம் அ.த.க. பாட சாலை) ,த.டிலக்சா(மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்).

**பிரிவு-III**

**கட்டுரை வரைதல்**

ர.பிறைநிலா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), ஜெ.ஜென்சிகா(மு/ தண்டுவான் அ.த.க பாடசாலை), கா.லுகேந்தினி(மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்).

**பிரிவு-IV**

**கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

கி.மெரி கிளக்சி(மு/மாங்குளம் மகா வித்தியாலயம்) ,ர.பிறைவாணி (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்)ப.சங்கவி (மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை)

**பிரிவு-V**

**கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

வி.விஜிதா(மு/மல்லாவி மத்திய கல்லூரி),க.சுலக்சனா(மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), செ.நிமல்கா(மு/ பாலிநகர் மகா வித்தியாலயம்)ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள்அனைவரையும்மாகாண மட்டப்போட்டியில் பங்கேற்பதற்கு தயார் படுத்திக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-3-15)




## மணல் கடத்தலில் ஈடுபட்ட இரு உழவு இயந்திரங்கள் சிக்கின

(திருமுறிகண்டி)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியின் வன்னேரிக்குளம், கண்ணகிபுரம் ஆகிய கிராமங்களில் கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 14 ஆம் திகதி திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன் போது மணல் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களையும் மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களையும் அவர்கள் கைப்பற்றினர்.

மேற்படி கிராமத்தில் மணல் கடத்தல் நீண்ட காலமாக இடம் பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்தே சுற்றிவளைப்பு இடம் பெற்றதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (2-3-311)

# நிலக்கண்ணியில் சிக்குண்ட யானை உணவின்றி நீண்ட நாட்களின் பின் பலி

## நெடுங்கேணியில் சம்பவம்

வவுனியா நெடுங்கேணி பகுதியில் நிலக்கண்ணி வெடித்ததில் யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

உணவு தேடி சென்ற யானை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் குறித்த யானை 8 வயது மதிக்கத்தக்கதெனவும் வவுனியா வனவிலங்கு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வெடி சம்பவத்தில் காலொன்று முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில், பலத்த காயங்களுடன் நீண்ட நாட்கள் உணவின்றி யானை உயிரிழந்திருப்பதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நீர் கிடைக்காததாலும், கால்கள் பாதிக்கப்பட்டமையால் எழுந்து நடக்க முடியாமையாலும் யானை உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மரண பரிசோதனைகளை வவுனியா வனவிலங்கு வைத்தியர்பி.கிரிதரன் மேற்கொள்ளவுள்ளதாக வனவிலங்கு அதிகாரசபை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (2-3)

# வரலாற்றுச் சிறப்பு மிக்க படைப்பாக அமைகின்ற திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி

திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் நிகழ்த்துகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க மாபெரும் நிகழ்வாக அமைகின்ற திருப்பாடுகளின் காட்சி வேள்வித் திருமகன் என்னும் பெயரில் இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் மேடையேற்றப் படுகின்றது.



திருப்பாடுகளின் நாடக வரலாற்றில் முதன் முதலாக தமிழ் மொழிக்குரிய தனித்துவப் பண்புகளுடன் அதற்குரிய நாடகப் பிரதிகளை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றி ஈழத்தில் திருப்பாடுகளின் நாடக வரலாற்றில் தனக்கென்றதொரு தடத்தைப் பதித்துள்ளவர் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளார்.

பல்வேறுபட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளை அவர் எழுதியிருந்த போதிலும் கடந்த 2012 ஆம் ஆண்டில் தனது குருத்துவப் பொன்விழா ஆண்டில் புதிதாக எழுதி அதே ஆண்டில்அவரது நெறியாள்கையில் திருமறைக் கலாமன்றத்தால் முதன்முதலாக மேடையேற்றப் பட்ட வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் நாடக வரலாற்றில் புதிய பாய்ச்சலுக்கு வழி சமைத்திருந்தது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக 2014 ஆம் ஆண்டில் திருமதி வைதேகி செல்மர் எமிலால் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்ட போது பலரது கவனத்தையும் அது ஈர்த்திருந்தது.

இரண்டு தடவைகள் மேடையேற்றப்பட்ட போதும் வேள்வித் திருமகனுக்கு கிடைத்த வரவேற்பும் எதிர்பார்ப்புமே மூன்றாவது தடவையாக இவ்வாண்டும் அதனை மேடையேற்ற முடிவாகியது.

இம்முறை இப் படைப்பை புதியவரான தை.ஜெஸ்ரின் ஜெலூட் நெறியாள்கை செய்கிறார்.அவரது நெறியாள்கையில் வேள்வித் திருமகன் இன்னுமொரு தடத்தைப் பதிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் திருப்பாடுகளின் நாடகங்களை நெறியாள்கை செய்வதற்கான கலைஞர்களை மன்ற இயக்குநரே தெரிவு செய்கின்றார்.

அதற்காக அவர்களிடம் நீண்ட கால அவதானிப்பில் நிறைவு ஏற்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றார்கள். முன்பு இதனை நெறியாள்கை செய்த மூத்த கலைஞர்கள் உட்பட எல்லோரும் துணை நிற்க புதியவர்கள் தமது சிந்தனைக் கேற்ப புதிய கோணத்தில் இவ்வாற்றுகைளை நெறிப்படுத்துகின்றார்கள்.

இந்த வகையில் கடந்த ஆண்டில் அன்பில் மலர்ந்த அமரகாவியம் மேடையேற்றப்பட்டபோதுஅதனை இ.ஜெயகாந்தன் நெறியாள்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பணியில் 50 ஆண்டுகளைக் கடந்து நடைபயின்ற திருமறைக்கலாமன்றத்தின் வரலாற்றோடு இணைந்து அதன் தோற்றத்திற்கு காரணமாக அமைந்த திருப்பாடுகளின்காட்சியைஆண்டுதோறும் நிகழ்த்திக் காட்டுவதென்பது மன்றத்திற்கு நேர்த்திக்கடன் போன்றே அமைந்து விட்டது.

மிகப் பெரிய மனித வலு மன்றத்தின் முழுமையான வளங்களின் பயன்பாடு, பாரிய நிதிச் செலவு என எல்லாவற்றையும் எதிர்கொண்டு தொடர்ச்சியாக இவ்வாற்றுகையை மேடையேற்றுவதென்பது இலகுவான விடயமல்ல. இத்தனையையும் தாண்டி இப்படைப்பு தொடர்ந்து மேடையேற்றப்படுகின்றதென்றால் அதற்குப் பின்னால் இருக்கக் கூடிய இறை தூண்டலும் நிகழ்த்துவதற்கான அருளும் ஆசியும் அளவிடற்கரியது.

இதனை இப் படைப்பை மேடையேற்றும் காலங்களில் அனுபவித்து உணர்ந்து கொண்ட சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

குழப்பங்கள், யுத்த அனர்த்தங்கள், இடப் பெயர்வுகள், இயற்கைப் பேரிடர்கள் சூழ்ந்த காலங்களில் ஏனைய நிகழ்ச்சிகளை நடத்த முடியாதிருந்த காலங்களில் கூட இந் நிகழ்வு மட்டும் தடையேதுமின்றி நடத்தப்பட்டு வந்துள்ளதிலிருந்தே இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

1971ஆம் ஆண்டுயாழ். கோட்டையின் பெருமதிப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு மேடையேற்றப்பட்ட அன்பில் மலர்ந்த அமர காவியம் 1995 இல்நிகழ்ந்தமாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வைத்தொடர்ந்து இடம்பெயர்ந்து வாழ்ந்த (மிருசுவில் பருத்தித்துறை) இடங்களில் மேடையேற்றப்பட்ட கல்வாரிச் சுவடுகள் 1997 இல் மீளக் குடியேறிய யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட பலிக்களம் 2007 இல் மூடுண்ட யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப் பட்ட மலையில் வீழ்ந்த துளிகள் என்றவாறாக ஒவ்வொரு திருப்பாடுகளின் நாடக மேடையேற்றங்களுக்குப் பின்னாலும் ஏராளமான அனுபவங்களைக்கூற முடியும்.

கிறிஸ்தவர்களின் தவக்காலம் ஆரம்பமாகிறது என்றாலே தவிர்க்க இயலாமல் எல்லோரது மனங்களிலும் நினைவுக்கு வருவது திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப் படுகின்ற திருப்பாடுகளின் காட்சியே என்றால் மிகையாகாது.

இம்முறை என்ன பெயரில் எந்தப் பிரதியை மேடையேற்றப் போகிறீர்கள்? அந்த நாடகத்தில் இடம் பெற்ற பாட்டு இம் முறையும் இடம் பெறுமா? என்றவாறாக பலவிதமான விசாரிப்புக்கள் மன்றத்தை நோக்கி தவக் காலத்தின் ஆரம்பம் முதலே வரத் தொடங்கி விடும்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை மையப்படுத்திய ஒரே கதையே, ஒரே வரலாறே ஒவ்வொரு ஆண்டிலும் ஆற்றுகை செய்யப்படுகின்றது என்றாலும் எதற்காக இதைப் பார்வையிடுவதற்காக பல்லாயிரக் கணக்கான மக்கள் அலைமோதுகின்றார்கள் என்பதிலிருந்தே இதற்கு இருக்கக்கூடிய வரலாற்றுப் பெறுமானம் நன்கு புலப்படும்.

திருப்பாடுகளின் நாடக நிகழ்வு ஆன்மீகம் சார்ந்த பக்தி நிகழ்வாக இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்றை மேடையில் நிகழ்த்திக் காட்டுகின்றதாக இருந்த போதிலும் அதற்கூடாக வெளிப்படுத்துகின்ற செய்தியானது அனைவருக்கும் பொதுவானதாக அமைகின்றது. இதனால் தான் இவ்வாற்றுகையைப் பார்வையிடுவதற்காக மத எல்லைகளைக் கடந்து மக்கள் திரள்வதுடன் கால நீரோட்டத்தோடு இணைந்ததாக இப் படைப்பு தயாரிக்கப்படுவதனால் பல்வேறு எதிர்பார்ப்புக்களுடனும் வருகின்றார்கள்.

கிறிஸ்தவ மக்களைப் பொறுத்த வரை மேலதிகம் பெறுமானமாக தவக் காலத்தில் மேற் கொள்ளுகின்றன. பல்வேறு பரித்தியாக முயற்சிகளுள் ஒன்றாக சடங்கு நிலைப் பெறுமானத்துடனும் இதனைப் பார்வையிடுகிறார்கள்.

இவ்வாறாக பல்வேறு சிறப்புக் களைக் கொண்டு நகர்கின்ற திருப்பாடுகளின் காட்சி வரலாற்றில் வேள்வித் திருமகன் திருப்பு முனையாக அமைந்த படைப்பாக துலங்குகின்றது.

கதையை நகர்த்திச் செல்வதற்கு பாடற்குழு (கோரஸ்) முதன் முதலாக இப் படைப்பிலேயே அறி முகப் படுத்தப்பட்டுள்ளது. முன்னைய படைப்புகளில் உரைகள், உரைஞர்கள், பாத்திரங்கள் மூலமே கதை நகர்த்திச் செல்லப்பட்டிருந்தது.

தவிரவும் பொருள் அளிக்கையிலும் மொழி நடையிலும் முன்னைய பிரதிகளில் இருந்து சற்று மாறுபட்டதாக இவ் எழுத்துரு ஆக்கப்பட்டுள்ளது.

மற்றுமோர் சிறப்பம்சமாக இயேசுவின் மீதான கொலைக் குற்றத்தை யூத இனம் முழுவதன் மீதும் சுமத்துவது தவறு என்றும் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சிறு குழு ஒன்றின் திட்டமே அது என்ற உண்மையையும் இப்படைப்பில் மரியசேவியர் அடிகள் வலியுறுத்துகின்றார். இவ்வாறாக பல சிறப்புக்களை கூறமுடியும்.

நிறைவாக மனித சமூகம் தன் நிலை தளர்ந்து திசைமாறிச் செல்கின்ற இக் காலத்தில் இயேசுவின் பாடுகளும் மரணமும் தருகின்ற செய்தியை- வெளிப்படுத்துகின்ற உண்மையை மனதில் இருத்துவது முக்கியமானதாகும். அதற்கு வேள்வித் திருமகன் சிறுபங்கையாவது வழங்கும் என்ற நம்பிக்கையுடன் அதனைப் பார்வையிடுவோம்.

**இ.செல்மர் எமில்**

# தனியார் மயமாக்கும் சதித்திட்டமே மின்சாரத்தடைக்கு காரணம்-திஸ்ஸ

மின் விநியோகத்தின் ஒருபகுதியை தனியார் மயமாக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டமே நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள மின்சார தடையாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பியகம உப மின்மாற்றியில் பாதிப்பு ஏற்பட்டால் எவ்வாறு நாடு முழுவதும் மின்சாரம் தடைப்படும் என்வும் அவர் கேள்வியெழுப்பினார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக இலங்கையில் நீர் மற்றும் அனல் மூலமே மின் உற்பத்தி இடம்பெறுகின்றது. இந்நிலையில் இலங்கை மின்சார சபை மின் விநியோகம் தொடர்பில் தனியார் துறையினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. பெரும்பாலான தனியார் துறையினர் எரிபொருள் மூலமே மின்விநியோகத்தை மேற்கொள்கின்றனர்.

தனியார் துறையினருடன் செய்துகொண்டுள்ள இந்த ஒப்பந்தம் மூலம் ஒரு அலகு மின் பாவனைக்கு 20ரூபா முதல் 70 ரூபா வரை அறவிடப்படுகிறது.

ஆனால் நீர் மூலம் விநியோகிக்கப்படும் மின்சாரத்துக்கு குறைந்த கட்டணமே பெறப்படும்.

மின் விநியோகம் தடைப்படும் காலங்களில் தனியார் துறையினரிடம் இருந்து கூடுதலான கட்டணத்துக்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள மின் விநியோக தடையை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை அமுல் படுத்த திட்டமிட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் கணனி மெனபொருள் கலப்பு முறை யொன்று பின்பற்றப்பட்டது. இதன் காரணமாக கடந்த 2 வருடங்கள் பாரிய மின் தடைகள் ஏற்படாத விதத்தில் மின் விநி யோகத்தை மேற்கொள்ள முடியு மாக இருந்தது. இவ்வாறான நிலை யில் கடந்த 6 மாதங்களில் 3 தடவை கள் மின் தடைகள் ஏற்பட்டும் அரசாங்கம் ஏன் இந்த முறையை பின்பற்றாமல் இருக்கின்றது என்பது தான் எமக்கிருக்கின்ற கேள்வியாகும்.

கடந்த அரசாங்கம் மின் விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கு நிறுவிய மக்கள்பாவனை ஆணைக குழுவே கணனி மென் பொருள் கலப்பு முறையிலான மின் விநியோகத்தை அங்கீகரித்தது.

எனவே அரசாங்கம் இந்த ஆணைக்குழுவின் ஆலோசனையைப்பெற்று தற்போது ஏற்பட்டுள்ள மின்சார தடை குழறுபடியை நீக்க வேண்டும்.

அத்துடன் இந்த கணனி முறை ஆரம்பிக்க முன்பிருந்தே உப மின்மாற்றி ஒன்று பாதிக்கப்பட்டால் குறிப்பிட்ட பகுதியிலேயே மின் விநியோகம் தடைப்படும்.

ஆனால் கடந்த ஞாயிற்றுக் கிழமை பியகம உப மின்மாற்றியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக நாடுமுழுவதும் எவ்வாறு மின் தடை ஏற்பட்டது என்பதுதான் எமது கேள்வியாகும்.

எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார தடையானது தொழில்நுட்ப கோளாறோ அல்லது இயந்திரங்களில் ஏற்பட்ட பாதிப்போ அல்ல. மாறாக அரசாங்கத்தின் செயற்றிறமை இன்மையால் ஏற்பட்டதாகும். அத்துடன் மின் விநியோகத்தின் ஒருபகுதியை தனியார் மயமாக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டமுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஆரம்ப வகுப்பு மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் சிரமங்கள்



பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பாடசாலைகளில் கல்வி கற்று எழுதும் வாசிக்கும் திறனைப் பெறாமல் காலத்தை வீணடித்து பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர் எண்ணிக்கை கணிசமானளவு இன்றுவரை காணப்படுகிறது. இது நடைமுறைக்கு ஒவ்வாத இலக்காகக் கருதப்படுகின்றது. கல்வித்துறை சார்ந்த பலரும் தத்தமது கடமைகளை சரிவர நிறைவேற்றியிருப்போமாயின் இவ் எண்ணிக்கை நலிவடைவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருக்கும். ஆக அப் பணியை அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வித் துறைக்குப் பொறுப்பானோர் சரிவரச் செய்வோமேயானால் நல்லதோர் ஆரோக்கியமான சமுதாயத்தை எதிர்காலத்தில் நிச்சயமாக உருவாக்கலாம். இப் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கு ஆரம்பக் கல்வித்துறையின் ஒத்துழைப்பு மிக மிக வேண்டற்பாலது. அந்நிலையில் முழுப் பொறுப்புக்களையும் அவர்களின் தலைமேல் சுமத்துவதும் ஆரோக்கியமானதல்ல.

### அறிமுகம்

பொதுவாக வகுப்பறைகளின் ஒப்பாசார நிலைமையை அவதானிக்கும் போது மொழி, கணித பாடங்களில் இசைவுறக்கூடிய நிலையில் மாணவர்கள் இல்லாத தன்மை காணப்படுகின்றது. மொழியைப் பொறுத்தவரையில் எழுதுவதிலும் வாசிப்பதிலும் மாணவர்கள் இடர்படுகின்றனர். ஆயின் இந்நிலையை ஆய்வு செய்கின்ற போது மொழி கற்றலில் உள்ள இடர்பாடுகளை சீர் செய்வதன் வாயிலாக ஏனைய பாடக் கற்றலை மேம்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. எனவே இங்கு மொழி கற்றலின் முக்கியத்துவம் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. எங்களில் பெரும் பாலானோர் சுய மொழிக்கூடாகவே கற்கிறோம். ஆயின் மொழியளவில் இடர்படுகின்றோம். எனவே இவ்விடரினை நீக்கிட முழுமையாக ஆவன செய்வது ஆசிரியர்களாகிய எமது பணியாகும். குறிப்பாக ஆரம்ப வகுப்பு மாணவர்களில் இடர்களை இரு வகையில் நோக்கலாம். அவற்றில் ஒன்று சாதாரணமானது மற்றையது விசேடமானது.

### கற்றலில் சிரமங்களை இனங் காணல்

பெருமளவிலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி வரையிலேயே அதிக அக்கறையுடையவர்களாய் திகழ்கின்றனர். இதனைத் தளமாகக் கொண்டே பல பாடசாலைகள் இயங்கு நிலையிலுள்ளன. ஆக பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆரம்ப வகுப்பு மாணவர்களும் இப் பண்புகள் பற்றிய தெளிவை பெற்றிருப்பார்களே ஆயின் பாடசாலையின் சவாலுக்கும் பிள்ளைகளின் நலனுக்கும் அது வாய்ப்பாக அமையும். மாறாக கல்வி தொடர்பானசவால்களுக்கு ஈடுசெய்ய முடியாத பிள்ளைக்ள் யாவரையும் கற்றலில் சிரமமுடையவர்கள் எனக் கணிக்க முடியாது. கற்றலில் சிரமத்தைச் சந்திக்கும் பிள்ளைகளிடையே பல்வேறு விதமான நடத்தைப் பண்புகள் காணப்படலாம். அதில் அதீத செயற்பாடுகள், புலக் காட்சி, உளஎழுச்சித் தன்மை, ஒருங்கிசைவு, வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய துறைகளில் காணப்படும் சிரமமான கற்றல் இடர்பாடுகள் ஆகியவை சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

### அதீத செயற்பாடுகள்

இது கற்றல் இடர்பாட்டுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. இச் செயற்பாட்டுடன் கூடியவர்கள் ஓரிடத்தில் தொடர்ந்து இருக்க முடியாதவர்களாகவும் குழப்பதுடன் விடையளிப்பவராகவும் வகுப்பறையில் காணப்படுவார்கள். இவ்வகையான மாணவர்களிடம் குழப்பமான தன்மையும் புத்திசாலித்தனமாகச் செயற்படாத நிலையும் விரவிக் காணப்படும், அதை விடச் சடுதியாக செயலாற்றுவதும் இவர்களின் பண்பாகும். எதைச் செய்யப்போகிறோம் என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் தம் மனதில் பட்டதை உடனடியாகவே செய்து முடிப்பார் என்று இவர்களில் விதிவிலக்கானவர்களும் உள் ளனர். பிள்ளைகள் ஏழு வயதாகுவதற்கு முன்னர் சில விசேட நடத்தைப் பண்புகளை குறைந்த பட்சம் ஆறு மாத காலமாவது கொண்டிருப்பார்களேயாயின் அவர்களை அதீத செயற்பாடுடையவர்கள் என அடித்துக் கூறலாம்.

### புலக்காட்சி

கண்,காது, மூக்கு, நாசி போன்ற உறுப்புகளினூடாகவும் தசைகளினூடாகவும் ஏற்படும் தூண்டல்களை மைய நரம்புத் தொகுதிக்கு அனுப்பி அச் செய்திக்கு யாதாயினும் ஒரு வலுவூட்டலைச் செய்வது புலக் காட்சி எனக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு நபரினது புலக்காட்சியும் கற்றலும் வேறுபட்டது. ஆயின் புலக்காட்சியின் பலவீனம் கற்றலில் பலவீனத்தை ஏற்படுத்தும். சிலரின் பார்வை தொடர்பான புலக்காட்சி வலிமையானதாகவிருக்கும். இதையொத்த தன்மையுடையோர் ஒரு வகுப்பில் ஒன்றிணையும் போது இரு பகுதியினருக்குமிடையே வேறுபாடு காணப்படும் சில பிள்ளைகள் காட்சி மூலம் நடப்பவற்றை மிக நன்றாக விளங்கிக் கொள்வர். அதேவேளை வாய் மூலமாக வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் புரிந்து கொள்வதில் சிரமங்களை சந்திக்கின்றார்கள். சிலரிடையே தாம் கேட்டவற்றை நினைவில் வைத்திருக்கவோ அன்றி தமது கருத்துக்களை வாய் மூலம் கூறுவதிலோ சிரமப்படுவர்.

### கேட்டல் பலவீனம்

பலத்த கேட்டல் குறைபாடில்லாத போதிலும் கேட்டவற்றையோ அல்லது கேட்பவற்றையோ நினைவில் கொள்ள முடியாத நிலை இவர்களிடையே காணப்படுகின்றது. இந்நிலை வெவ்வேறு மட்டங்களில் காணப் படலாம். கேட்டலைப் பிரித்தறிய இரண்டு ஒலிகளுக்கிடையேயான வேறுபாட்டினை இனங்காணும் நிலை இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

### பார்வைப் பலவீனம்

கண்களினூடாக பெறும் தூண்டல்களை உய்த்தறிதல் பார்வை புலக் காட்சியாகும். இவற்றுள் பல துணைத்திறன்கள் உள்ளடங்கும். தேவையானவற்றில் மட்டும் கவனத்தைச் செலுத்தி தேவையற்றவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் விடுதல் இங்கு குறிப்பிடும் திறனாகும். இத் திறனற்ற நிலையில் வாசிப்பில் சிரமம் ஏற்படும் வாசிப்புக்குத் தேவையான எழுத்துக்களை அல்லது சொற்களை சொற்களின் பின்னணியிலுள்ள சொற்களிலிருந்து வேறுபடுத்திக் கொள்ளாமையே இதற்குரிய பின்னணியாகும்.

### சமூக ஆளுமைப்பண்புகள்

கற்றலில் சிரமத்தை சந்திக்கும் பிள்ளைகளின் சமூக ஆற்றலும் குறைபாடுகள் நிலவுவதாகத் தெரிய வருகின்றன. இவர்கள் சமூக வழி காட்டலைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள்.



மற்றவர்களின் மறு தாக்கங்களைப் பிழையாக விளங்கிக் கொள்ளும் வாய்ப்பும் இவர்களிடையே காணப்படும். கற்றல் குறைபாடுகளுக்கு காரணம் கூற முடியுமா என்பது இங்கு முக்கிய வினாவாகும்.இவர்கள் வெட்கம் கலந்த உணர்வுடனேயே செயற்படுவார்கள். எனவே வெட்கத்துக்கு ஆளாகாத வகையில் இவர்களை வைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். சம்பந்தப்பட்டவர்களை வற்புறுத்தாதிருப்பது முக்கியமானதாகும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இவர்கள் கற்பதற்கு கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் அவர்களைப் பாராட்ட வேண்டும். தட்டிக்கொடுக்க வேண்டும். கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்டதும் விமர்சனம் மிக்கதுமான சூழல் அவனுக்கு பொருத்தமானதல்ல. இதற்குப் பரிகாரமாக அமைவது இவர்களின் இடர்களை ஈடுசெய்வதாகும். ஞாபகம் தொடர்பான சிரமங்களையுடைய பிள்ளைகளுக்கு மிகவும் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தலாம். ஆயின் இந்நிலையில் பிள்ளைகளின் பலம், பலவீனம் கணக்கிலெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான கைங்கரியங்களை மேற்கொள்ளுமிடத்து படிப்படியான முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஒவ்வொருபிள்ளைக்கும் தத்தமது ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களைத் தருவதினூடாக அவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

### ஆசிரியர் வகிபாகம்

ஆசிரியர் கொள்கை வாதியாக இல்லாதிருத்தல் மிக முக்கியமாகும். கற்றலில் சிரமப்படும் பிள்ளையைப் பார்த்து அல்லது அதன் குடும்பப்பின்னணியைப் பார்த்து இப்பிள்ளைக்குக் கற்பிக்க முடியாது என்ற தீர்மானத்தை மேற்கொள்ளல் கூடாது. அப்பிள்ளைக்கு உன்னால் படிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தூண்டுபவராக விடுத்தல் வேண்டும். ஆசிரியரின் பதவிக்கும் பட்டத்துக்கும் இப்பிள்ளைகள் பொருத்தமற்றது என்ற விதண்டாவாதக் கருத்தைப் பிரயோகிப்பவராக இருக்கக் கூடாது .இந்நிகழ்வு ஆசிரியரின் வகிபாகத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். மாறாக கற்றலில் புலக்காட்சி ஆற்றலையும் இனங்கண்டு அதற்கேற்ப ஒழுங்கு முறையில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். பொதுவாக ஆசிரியரின் நெகிழும் தன்மை வரவேற்கத்தக்கது. பல்வேறு கற்பித்தல் முறைகள் நுட்பமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானது எல்லா மாணவர்களும் மாணவர்களே என்ற சிந்தனையை மனதிலிருத்தி பிள்ளை விரும்பும் ஆசிரியராக மாறுவது கற்றலில் சிரமத்தைக் குறைக்கும். மேலாகப் பெற்றோரின் ஆதரவைத் தனக்குப் பக்கபலமாக்குவது வாய்ப்பை பலமடையச் செய்யும்.

### பெற்றோரின் வகிபாகம்

கற்பித்தல் ஆசிரியரின் கடமை எனக் கருதி தம்மால் வழங்கப்பட வேண்டிய பங்களிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் பல பெற்றோர்கள் வழங்குவதில்லை. கற்றலில் சிரமங்களைப் போக்க இவர்களின் பங்களிப்பு வேண்டத்தக்கதும் மிக மிக முக்கியமானதுமாகும்.

எனவே கற்றலில் வெற்றிப்படியில் பெற்றோரின் பங்களிப்பு முதற்படி சில பெற்றோர்கள் தம்மால் கற்பிக்க முடியுமாயின் ஆசிரியர்கள் தேவை தானா என்ற கருத்துடன் அளவளாவதுண்டு. ஆயின் பிள்ளைகளின் பொறுப்புக்களை மற்றொருவரிடம் ஒப்படைத்து விட்டுத் தாம் ஒதுங்கிக்கொண்டால் கல்வியின் தரம் வளர்ச்சியடைய வாய்ப்பில்லை. இங்கு பிள்ளை ஆசிரியர் பெற்றோர் பாடசாலைத் தொடர்பும் உறவும் மிகமிக முக்கி யமானது என்பதை அங்கீகரிக்க வேண் டும். இதனை உன்னிப்பாக அவதானிப்பதில் பெற்றோர் திருப்தியடைய வேண்டும். மாறாக பிள்ளையை அவமானப்படுத்துதல், சிரமத்துக்கு ஆளாக்குதல், குறை கூறுதல் என்பவற்றின் மூலம் பிள்ளைகளில் குற்ற உணர்வை ஏற்படுத்தக் கூடாது. வார்த்தைப் பிரயோகங்களில் அவதானம் தேவை. ஓய்வு, விளையாட்டு, நேரம் வழங்கப்பட வேண்டும், கல்விக்கான சுற்றுலா ,வெளிக்கள வேலை போன்றவற்றை மறுதலிக்கக் கூடாது. பெற்றோர்களும் இளமையின் இரகசியம் விளையாடுவதே என்ற தீர்மானத்தை உறுதிப்படுத்திக் கொள்வது வரவேற்கத்தக்கது. பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமான அளவிலும் கூடிய படிப்பு வேலைகளை அவனுக்கு வழங்க எத்தனிக்கக்கூடாது என்பதை திடப்படுத்திக் கொள்ள வேண்டும்.

### சூழலின் வகிபாகம்

பிள்ளையின் கற்றலை நிர்ணயிப்பதில் சூழலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவை கற்றலில் சிரமத்துக்கு வழி காட்டுபவையாக அமைதல் வேண்டும். சூழலில் இடைவிலகல் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பெற்றோர்களிடம் கலந்துரையாடி கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இரவில் கல்வி கற்பதற்கும் பொருத்தமான வேளைகளில் ஒலிகளால் சூழல் மாசடையும் நிலையைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆரோக்கியமான முறையில் கட்டுப்படுத்தலாம். குழுவாக இரவில் கற்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதுடன் வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். இதற்கான தொடர் நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதனால் பிரதேசத்தில் சமூக சீர்கேடுகளை மட்டுப்படுத்தி சூழலை தற்காத்துக் கொள்ளவும் முடியும். குறிப்பாக மாற்றுவலுவுடையோர் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவதிலும்சூழலில்தன்னாலியன்ற பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்க ஆவன செய்தல் வேண்டும்.

நிறைவாக சிரமங்களை நீக்குவது சிரமமானது எனக் கொள்வோமாயின் செல்லும் வழி இருட்டாகவே இருக்கும். எனவே இவ்வழிக்கு ஒளியூட்டி சிரமங்களைப் போக்க அனைத்துத் தரப்பினரும் தோள் கொடுக்கும்போது வலு வான பலமான அடித்தளத்தை உரு வாக்கி சமூகத்துக்கு ஒப்படைக்க முடியும் என்பதை உறுதி பூணுவோம்.

மு.விக்னேஸ்வரன்
(அதிபர்)
யா/உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்

# சிரியாவில் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும்

## ரஷ்யா திடீர் அறிவிப்பு

(மொஸ்கோ)

**சிரியாவில் உள்ள ரஷ்ய இராணுவம் அந்நாட்டை விட்டு வெளியேறி வரும் நிலையில் 'சிரியாவில் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும்' என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள திடீர் அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்த பேச்சுவார்த்தையின் முதல் நாளான நேற்று முன்தினம் சிரியாவில் இருந்து தனது நாட்டு இராணுவத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதாக ரஷ்ய ஜனாதிபதியான புடின் அறிவித்தார்.

இந்த உத்தரவை தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு முன்னர் சிரியாவில் உள்ள ரஷ்ய நாட்டு போர் விமானங்கள் அந்நாட்டை விட்டு வெளியேறி ரஷ்யாவை நோக்கி புறப்பட்டன.

இந்நிலையில், நேற்று வெளியான தகவலில் சிரியாவில் ரஷ்யாவின் தாக்குதல்கள் தொடரும் என வெளியாகியுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் துணை பாதுகாப்பு அமைச்சரான நிக்கோலே பன்கௌ என்பவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், சிரியாவில் ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் பலனுள்ள தீர்வுகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால், தீவிரவாதத்தை முழுமையாக ஒடுக்கி விட்டதாக கருத முடியாது. எனவே, சிரியாவில் ரஷ்ய இராணுவத்தின் வான்வழி தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும்.

இதற்காக ரஷ்ய நாட்டை சேர்ந்த 2 பாட்டாளியன் படை மற்றும் 800 இராணுவ வீரர்கள் சிரியாவிலேயே நீடித்து இருக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய நாட்டு இராணுவம் சிரியாவை விட்டு வெளியேறி வரும் சூழலில் திடீரென இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## இராணுவ விமானம் விபத்துக்குள்ளானது





தென் அமெரிக்க நாடான ஈக்குவடோர் இராணுவ விமானம் நேற்று அதிகாலை அமேசன் காட்டுப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அந்த விமானத்தில் பயணம் செய்த 22 பேர் பரிதாபமாக பலியாகினர்.

இந்த தகவலை ஈக்குவடோர் நாட்டு ஜனாதிபதி ரபேல் கொர்ரியா தெரிவித்தார். இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த தகவலை கூறியுள்ள அவர் உயிர் பிழைத்தவர்கள் யாரும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான விமானத்தில் 19 பயணிகளும், இரண்டு விமானிகளும் ஒரு மருத்துவரும் இருந்தனர். பெருநாட்டு எல்லைக்கு அருகில் உள்ள பஸ்டாஸா மாகாணத்தின் வடக்கு பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பரசூட் பயிற்சி பெறுவதற்காக இராணுவ வீரர்கள் அந்த விமானத்தில் சென்று கொண்டிருந்ததாக அந்நாட்டு இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## அன்னை திரேசாவுக்கு செப்-4 'புனிதர் பட்டம்'



அன்னை திரேசாவிற்கு எதிர் வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி புனிதர் பட்டம் வழுங்கப்படும் என்று போப் பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் பல நாடுகளின் மிக உயர்ந்த விருதுகள் மற்றும் நோபல் பரிசு பெற்ற அன்னை திரேசா கடந்த 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் கொல்கத்தாவில் காலமானார்.

வாழ்நாள் முழுவதும் தொழுநோயாளிகளுக்காகவும் ஏழை, எளிய மக்களுக்காகவும் தன்னலமற்ற சேவை புரிந்த திரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர்.

மேற்குவங்கத்தை சேர்ந்த மோனிசா என்ற பெண் வயிற்றில் புற்றுநோய் கட்டியால் அவதிப்பட்டு வந்ததும், அதன் பின் திரேசா உருவம் பதித்த சங்கிலியை அணிந்து பிரார்த்தனை செய்து வந்த பின் புற்றுநோய் குணமானதாகவும் தெரிய வந்தது.

இதை வத்திக்கான் தீவிரமாக ஆய்வு செய்த பின், கடந்த 2003 ஆம் ஆண்டு அன்னை திரேசாவை 'அருளாளர்' என்று அங்கீகரித்தது.

மேலும் பிரேசில் நாட்டில் ஒருவர் மூளை பாதிக்கப்பட்டு கோமா நிலைக்கு தள்ளப்பட்டார். அவரது குடும்பத்தினர் அன்னை திரேசாவை பிரார்த்தனை செய்து வந்துள்ளனர். அதன்பின் அவர் பூரண குணமடைந்துள்ளார்.

எனவே, இந்த 2 ஆவது அற்புதத்தையும் போப் பிரான்சிஸ் அங்கீகரித்து அன்னைக்கு புனிதர் பட்டம் வழுங்க ஒப்புதல் அளித்துள்ளார். (இ-5)

## சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படை ஏமனில் தாக்குதல்




ஏமன்நாட்டில்சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் 65 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி அரேபியா தலைமையிலான அரபு கூட்டணி நாடுகள் .தாக்குதல் நடத்தி வருகிறன. ஈரானின் உதவியுடன் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஏமனின் வடக்கில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் நடமாட்டமுள்ள சந்தைப் பகுதிகளில் இரண்டு வான் வெளி தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதலில் சுமார் 65 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் வீடுகள், கடைகள் மற்றும் உணவு விடுதிகள் உள்ளிட்டவை சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-5)

# விரைவில் அணுஆயுத சோதனை வடகொரியா மீண்டும் மிரட்டல்

(சியோல்)

**மீண்டும் அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனை போன்றவை விரைவில் நடத்தப்படும் என்று வட கொரியா அறிவித்துள்ளது.**



உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக தொடர்ந்து அணு ஆயுத சோதனையை வட கொரியா நடத்தி வருகிறது.

பல்வேறு முறை எடுத்துக் கூறியும் அந்நாடு தனது செயலில் இருந்து பின்வாங்கவில்லை.

இதன் காரணமாக அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீண்டும் அணு ஆயுதத்தை சோதிக்க போவதாக வடகொரியா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி கிங் ஜாங் உன், இன்னும் குறுகிய காலத்தில் அணு ஆயுத சோதனைகளை தொடங்க வேண்டும் என்று அந்நாட்டு விஞ்ஞானிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணை சோதனையை நடத்தவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் வட கொரியாவின் இந்த சோதனைகள் சுய அழிவுக்கு வழி வகுக்கும் என தென் கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-5)

## கியூபா மீதான தடைகளைத் தளர்த்துகிறது அமெரிக்கா

கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கியூபாவிற்கு இன்னும் சில தினங்களில் அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில், கியூபா மீதான பொருளாதார மற்றும் போக்குவரத்து துறைகளில் விதிக்கப்பட்டுள்ள தடைகளை அமெரிக்கா தளர்த்தவுள்ளது. அமெரிக்கா, கியூபா ஆகிய 2 நாடுகள் இடையே அரை நூற்றாண்டு காலமாக பகைமை நிலவி வந்தது. இப்போது அவ்விரு நாடுகள் பகைமைக்கு விடை கொடுத்து விட்டு உறவுக்கு நட்புக்கரம் நீட்டி உள்ளன. தூதரக உறவும் மலர்ந்துள்ளது.

இந்த உறவினை மேலும் வலுப்படுத்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கியூபாவுக்கு செல்ல உள்ளதாக கடந்த சில மாதங்களாகவே கூறப்பட்டு வந்தது. இந்த சுற்றுப் பயணத் தகவலை கடந்த சில தினங்களுக்கு முன்பு ஒபாமா உறுதி செய்தார். (இ-5)

## பிரசெல்ஸ் நகரில் துப்பாக்கிச்சூடு பாரிஸ் தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொலை

பிரசெல்ஸில் பொலிஸார் நேற்றுக் காலை நடத்திய தீவிரவாத தடுப்பு சோதனையில் பாரிஸ் தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த நவம்பர் மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 130 பேர் பலியாகினர்.

உலகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த தாக்குதலில் தொடர்புடையவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பெல்ஜியம் நாட்டின் பிரசெல்ஸ்நகரில்உள்ளஒரு அடுக்கு மாடி குடியிருப்பில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக தீவிரவாத தடுப்பு பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து பெல்ஜியம் நாட்டின் பொலிஸார் அந்த கட்டடத்தை சுற்றி வளைத்தனர். அவர்களுடன் பிரான்ஸ்பொலிஸாரும்இருந்துள்ளனர்.

அதிகாரிகளில் ஒருவர் கதவை தட்டியபோது தீவிரவாதிகள் உள்ளிருந்து துப்பாக்கியால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதையடுத்து பொலிஸாரும் தாக்க தொடங்கினர். இந்த துப்பாக்கிசூட்டில்4 பொலிஸார்காயமடைந்தனர. தீவிரவாதிகள் தரப்பில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. மேலும் இருவர் வீட்டுக்குள்மறைந்துள்ளதாக பொலிஸ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த சம்பவம் காரணமாக அங்குள்ள பாடசாலைகள்மற்றும கலலூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. பொதுமக்கள் அனைவரையும் வீட்டுக்குள்ளே இருக்கும்படி பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். (இ-5)

## 5கோடியே 62 இலட்சம் ரூபாய் சினிமா நட்சத்திரங்கள் நிலுவை

### பாதுகாப்பு பெற்றதற்கான செலவில்

பிரபல தொழில் அதிபர்கள், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு மாநில அரசின் சார்பில் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 62 பேர், பாதுகாப்பு செலவு தொகையை முறையாக செலுத்தவில்லை என்றும் கடந்த ஆண்டு டிசெம்பர் வரையில் ரூ.5 கோடியே 62 இலட்சம் நிலுவை இருப்பதாகவும், இதனை மாவட்ட ஆட்சியர்கள் வசூலிப்பார்கள் என்றும் முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் நேற்று முன்தினம் சட்டசபையில் தெரிவித்தார்.

அஸ்லம் சேக் எம்.எல்.ஏ., (காங்கிரஸ்) எழுப்பிய கேள்விக்கு, இவ்வாறு எழுத்துபூர்வமாக அவர் பதிலளித்தார். (இ-5)

## இந்தியாவின் பாதுகாப்பு நேபாள வளர்ச்சியுடன் தொடர்புடையது

### வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

(காத்மண்டு)

இந்தியாவின் பாதுகாப்பானது நேபாளத்தின் வளர்ச்சியுடன் தொடர்புடையது என இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

சார்க் நாடுகளின் வெளியுறவுத்துறை செயலாளர்கள் நிலையிலான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் ஜெய்சங்கர் நேற்று முன்தினம் நேபாளம் சென்றுள்ளார். கூட்டம் நடைபெறும் பொகாராவுக்கு செல்வதற்கு முன்பாக, காத்மண்டு நகரில் பிரதமர் கே.பி. ஒலியை சந்தித்து பேசினார்.

அப்போது, இந்தியாவின் பாதுகாப்பு நேபாளத்தின் செழுமையுடன் தொடர்புடையது என்பதால் நேபாளத்தில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி ஏற்பட இந்தியா விரும்புவதாக ஜெய்சங்கர் தெரிவித்தார்.

நேபாளத்தின் உள்நாட்டு பிரச்சினை மாதேசி கட்சிகளின் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தீர்க்கப்படும் என ஜெய்சங்கரிடம் பிரதமர் ஒலி தெரிவித்தார். மேலும், இந்திய முதலீடுகளுக்கு நேபாளத்தில் பாதுகாப்பு வழங்கப்படுவதாக கூறிய அவர், மேலும் முதலீடுகள் செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். (இ-5)

## அரச ஊழியர்கள் பயணித்த பேருந்தில் குண்டு வெடித்தது

### 15 பேர் பலி, 25 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் நேற்றுக் காலை அரசு தலைமைச் செயலக ஊழியர்களை ஏற்றிவந்த பேருந்தில் நிகழ்ந்த சக்திவாய்ந்த குண்டுவெடிப்பில் 15 பேர் உடல் சிதறி பலியாகினர்.

மர்தான் என்ற இடத்தில் இருந்து வழக்கம்போல் நேற்றுக்காலை அரசு ஊழியர்களை ஏற்றிவந்த அந்த தனியார் பேருந்து பெஷாவர் நகரை நெருங்கியபோது, சுனெஹ்ரி மசூதி அருகே, பேருந்தின் பின்பகுதியில் மறைத்து வைத்திருந்த சக்திவாய்ந்த் டைம்பாம்ப் ரக குண்டு திடீரென வெடித்தது.

இச்சம்பவத்தில் 15 அரசு ஊழியர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், காயமடைந்த சுமார் 25 பேர் பெஷாவரில் உள்ள லேடி ரீடிங் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் தேவையான-தரமான சிகிச்சை அளிக்குமாறு கைபர் பக்துங்வா மாகாண முதலமைச்சர் பர்வேஸ் கட்டாக் உத்தரவிட்டுள்ளார். எனினும், அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. (இ-5)

## மரண அறிவித்தல்



### வீரகத்தியார் பாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் உப தபாற் கந்தோர் வரணி.)**

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தியார் பாலசிங்கம் (15.03.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வீரகத்தியார்-அபிராமி தம்பதியரின் அன்பு மகனும் சேதுப்பிள்ளையின் அன்புக்கணவரும் பாலாம்பிகை (ஆசிரியர் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பாலகுமாரி (கனடா), பாலதாஸ் (உதவி நிதியாளர், வவுனியா வளாகம் யாழ்.பல்கலைக்கழகம்), முரளீதரன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ரவீந்திரன்(கனடா), அனுஷா(சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்), கவிதா.(அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சங்கவி, கௌரிபாலன், கௌதமன், மதூர்சன், மயூரிக்கா,சஞ்சீவன், அஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18-03.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் ஐயங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3917)

வரணி, வடக்கு, வரணி.
021 205 0888.

தகவல்:
குடும்பத்தினர்

## லிந்துலை பகுதியில் பாரிய விபத்து



லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோகி தோட்ட குடியிருப்புக்கு சொந்தமான ஒரு வீட்டில் லொறி ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.இவ்விபத்து ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் லோகி தோட்ட தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.மேலும், விபத்துக்குள்ளான லொறி வீதியில் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதன் பின் அதன் சாரதி அருகில் உள்ள தனது வீட்டிற்கு சென்று வருவதற்கு முன்னர் வாகனத்தின் நடத்துநர் ஒருவரால் வாகனத்தை செலுத்த முற்படுகையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.இவ்விபத்தினால் குறித்த வீடு முற்றாக சேதமாகியுள்ளது. எனினும் இதன்போது எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-16.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.00 | 146.93 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.33 | 208.51 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 157.73 | 164.02 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 143.78 | 149.80 |
| டொலர் | கனடா | 106.32 | 110.64 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 105.56 | 110.48 |
| டொலர் | சிங்கப்பூர் | 103.18 | 107.15 |
| ரூபா | இந்தியா | 2.1371 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6923 |
| குவைத் | டினார் | 478.0664 |
| ஓமான் | ரியால் | 373.7756 |
| கட்டார் | ரியால் | 39.5156 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3692 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1762 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 75 | 100 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 120 | 140 | 140 | 160 | 120 |
| தக்காளி | 30 | 40 | 30 | 30 | 40 | 50 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 40 | 40 | 35 | 60 | 50 | 80 | 40 |
| கரட் | 80 | 100 | 80 | 90-200 | 100 | 160 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 40 | 30 | 30 | 60 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 | 50 | 40 | 150 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 60 | 50 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 65 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 160 | 120 | 120 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 50 | 50 | 80 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 50 | 80 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 50 | 40 | 40 | 50 | 80 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 50 | 40 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 80 | 100 | — | 100 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 60 | — | 100 | 90 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 80 | 100 | 160 | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 25-30 | 50 | 40 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 120 | 200 | 100 | 140 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 80 | 140 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 40 | 50 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## டில்லியில் ராஜீவ்காந்தி-பிரபாகரன் சந்திப்பு 133

இந்திய-இலங்கை ஒப்பந்த விவகாரத்தில் பிரபாகரன் என்ன முடிவு எடுக் கிறாரோ அதற்கு தனது முழு ஆதரவும் இருக்கும் என்றார் எம்.ஜி. ஆர். அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்காது, கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பது குறித்துப் பிரபாகரனை அவர் பாராட்டவும் தவற வில்லை.

முதலமைச்சருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம். முதலமைச்சரின் சந்திப்பு அறைக்கு வெளியே தீட்சித்தும் ஒரு இந்தியப் புலனாய்வு அதிகாரியும் நின்று கொண்டிருந்தனர். எங்களை வழி மறித்த இந்திய தூதுவர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள் ளும்படி முதலமைச்சர் வற்புறுத்தினார் அல்லவா? என்று கேட்டார். நாங்கள் பதிலளிக்காது மௌனமாக நின்றோம். முதலமைச்சர் சொன்னபடியே செய்யுங்கள் என்றார். அப்படியே செய்வோம் என்று கூறிவிட்டுச் சென்றோம்.

இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் 1987 ஆம் ஆண்டு ஜுலை 29 ஆம் திகதி இலங்கையில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முதல் நாள் டில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் சந்தித்துப் பேசினார்கள். விடிய விடிய ஆலோசனை நடத்தினார் கள்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் ராஜீவ்காந்தி மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டார். சிங்களவருக்கு சாதகமாக நடந்து கொண்டிருந்த இலங் கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அழுத்தம் கொடு த்து இந்த சமரச ஒப்பந்தத்தை உருவாக் கினார்.

### விடுதலைப்புலிகள்

ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் எதிர்த்ததால் முட்டுக் கட்டை ஏற்படக்கூடிய சூழ் நிலை ஏற்பட்டது.

எனவே பிரபாகரனுடன் நேரடிப் பேச்சு நடத்த ராஜீவ் காந்தி தீர்மானித்தார்.

1987 ஆம் ஆண்டு ஜுலை 28 ஆம் திகதி நள்ளிரவு அசோகா ஹோட்டலில் பிரபா கரனும் பாலசிங்கமும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களை அதிகாரிகள் தட்டி எழுப்பினார்கள். பிரதமர் ராஜீவ்காந்தி உங்களுடன் பேச விரும்புகிறார் என்று கூறி அவர்களைப் பிரதமரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

வீட்டு வாசலில் காத்து நின்றார் பிரதமர் ராஜீவ் காந்தி. உள்துறை புலனாய்வுத்துறை அதிகாரி எம்.கே. நாராயணனும் உடன் இருந்தார்.

### ராஜீவ் வரவேற்பு

புன்முறுவல் பூத்தபடி வரவேற்ற பிரதமர், பிரபாகரனைப் பார்த்து, உங்களைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். உங்களை நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

அங்கு தமிழக அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனும் இருந்தார். கலந்துரையாடல் உடனே ஆரம்பித்தது.

இந்த ஒப்பந்தம் குறித்து நீங்கள் அதிருப்தி அடைந் திருப்பதாக அறிந்தேன். ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி விரிவாகக் கூறுவீர்களா? என்று கேட்டார் ராஜீவ்காந்தி. விடுதலைப்புலிகள் தரப்பு கருத்துக்களை விபரமாக விளக்கும்படி பாலசிங்கத்திடம் பிரபாகரன் கூறினார்.

விடுதலைப்புலிகளின் கருத்துக்களைப் பாலசிங்கம் விளக்கினார்.


அவர் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்ட ராஜீவ்காந்தி, குறிப்புக்கள் எடுத்துக் கொண் டார்.

பாலசிங்கம் கூறி முடித்ததும், ராஜீவ்காந்தி சொன்னார்: உங்களது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு காணவேண்டும் என்பதில் எனது அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த விடயத்தில் உங்களது ஒத்துழைப்பு எனக்கு அவசியம் தேவை. நீங்கள் சொல்வது போல இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கத்தான் செய் கின்றன. இந்த ஒப்பந் தத்தில் குறிப்பிடப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு தற்காலிக ஒழுங்கு தான். அதில் உள்ள குறைபாடுகளைப் பின்பு நான் ஜெயவர்த்தனாவுடன் பேசி நிவர்த்தி செய்ய முயல் வேன். தமிழர் தாயகம் பற்றி நீங்கள் எழுப்பிய ஆட்சேபனையை நான் கவனத்தில் எடுத்துள்ளேன். இதுபற்றி நான் ஜெயவர்த்தனாவுடன் பேசுவேன். கருத்து வாக்கெடுப்பு நடத்தாமல் அதனை ஒத்தி வைக்குமாறு சொல்லு வேன். நீங்கள் இந்திய அரசை நம்ப வேண்டும். தமிழரின் நலன் மீதுதான் நாம் அக் கறை கொண்டு செயல்படுகிறோம். எனவே உங்களது ஆதரவு எங்களுக்குத் தேவை. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து அவர்களது பாதுகாப்பை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தும்.

ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரித்தால் எனது கையை பலப்படுத்துவதாக அமையும் என்றார்.

இந்தியப் பிரதமர் கூறியவற்றை தமிழில் மொழி பெய ர்த்து பிரபாகரனுக்கு விளக்க மளித்தார் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன்.

ஆனால் பிரபாகரன் திருப் தியடையவில்லை. இதை உணர்ந்து கொண்ட ராஜீவ் காந்தி உங்களது நிலைப்பாடு உங்களுக்குப் புரிகிறது. நீங்கள் எடுத்த முடிவையோ கொள்கைளையோ மாற் றச்சொல்லி நான் கேட்கவி ல்லை. நீங்கள் இந்த ஒப் பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்பு தெரி விக்காமல் இருந்தால் போதும் என்றார்.



(தொடரும்)

# 14 பாதாள குழுக்கள் தெற்கில் ஆதிக்கம்

(கொழும்பு)

**தெற்கில் 14 பாதாள உலகக்குழுக்கள் செயற்பட்டு வருவதாக சிங்கள பத்திரிகையொன்று அதிர்ச்சிச்செய்தி வெளியிட்டுள்ளது.பாதாள உலகக் குழுச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் நியமிக்கப்பட்ட விசேட குழு நடத்திய ஆய்வுகளின் மூலம் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**



சுற்றுலா விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்களிடம் கப்பம் பெறுக் கொள்ளல் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகம் ஆகியனவே இந்த பாதாள உலகக்குழுக்களின்பிரதனவருமானமாக அமைந்துள்ளது.

பாதாள உலகக்குழு உறுபபினர்களுக்கு இடையிலான மோதல்களினால் மேற்கொள்ளப்படும் கொலைகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான கொலைகள் காரணமாக தெற்கில் பாதாள உலகக்குழு பீதி ஏற்பட்டுள்ளது.

பலபிட்டிய, ஹிக்கடுவ உள்ளிட்ட தெற்கின் பல இடங்களை மையமாகக் கொண்டு இந்த பாதாள உலகக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

பாதாள உலகக் குழுக்களின் இருப்பிடங்கள், அவர்களின் செயற்பாடுகள் குறித்த தகவல்களை பொலிஸார் திரட்டியுள்ளதாகவும், இந்தக் குழுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## தொலைபேசியைப் பயன்படுத்தி

# சிறையிலிருந்து குற்றங்களை மேற்கொள்ளும் கைதிகள்!

கைதிகள் சிறையில் இருந்து கொண்டு தொலைபேசி மூலம் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை பாரியளவில் உயர்வடைந்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் தொலைபேசிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும் அதனை தடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும்சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளும், தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக் குழுவின் அதிகாரிகளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முன்னர் சிறைச்சாலைக்குள் கைதிகள் குற்றவாளிகள் தொலைபேசி பயன்படுத்துவதனை நிறுத்த ஜாமர்கள் (Jaming) நிறுவப்பட்டன. எனினும், இந்த ஜாமர்கள் ஊடாக கைதிகளின் தொலை பேசி பயன்பாட்டை முழுமையாக நிறுத்த முடியவில்லை.


அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் பல குற்றச் செயல்கள் தொலைபேசி மூலம் சிறையிலிருந்து போட்ட திட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டவை என்பது விசாரணைகளின் மூலம தெரியவந்துள்ளது.

அடிக்கடி சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு தொலைபேசிகளை கைதிகளிடமிருந்து மீட்ட போதிலும், கைதிகளின் தொலைபேசி பயன்பாட்டை முழுமையாக தடுக்க முடியவில்லை என சிறைச்சாலை திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனவே, சிறைச்சாலைகளில் தொலைபேசி பயன்பாட்டை தடுக்க விசேட திட்டமொன்று வகுக்கப்பட உள்ளதாகவும், தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவுடன் இணைந்து இந்த திட்டத்தை சிறைச்சாலை திணைக்களம் முன்னெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை பெற இலங்கை விண்ணப்பிக்கவில்லை

## ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டு



ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் இதுவரையில் விணணப்பங்கள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச அபிவிருத்தி விவகார ஆணையாளர் நெவன் மிமிகா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரிச் சலுகையை பெற்றுக் கொள்வதற்காக இதுவரையில் இலங்கை அரசாங்கம் விண்ணப்பிக்கவில்லை.

விண்ணப்பித்ததன் பின்னர் குறித்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து சலுகைத் திட்டத்தை வழங்குவதற்கு குறைந்த பட்சம் 8 மாத கால அவகாசம் தேவைப்படும்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் நல்லிணக்க முனைப்புக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் வழங்குவது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் வரிச் சலுகை வழங்குவது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப் படும் என மிமிகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வாழ்வே வியாபாரமா?

இதைச் சொன்னால் என்ன கிடைக்கும்?

அதை நகர்த்தி வைப்பதில் நமக்கு என்ன இலாபம்?

என்று ஒவ்வோர் அங்குல அசைவிலும் ஆதாயம் என்ன என்று கணக்குப் பார்க்கும் தவறான செயல் பலரால் கையாளப்பட்டு வருகிறது.

இதுவே வாழும் வழி என்றெல்லாம் தவறான அனுமானங்களை ஏற்படுத்திக்கொண்டு கண் ணுக்குப் புலப்படாத ஆபத்தை நோக்கி நடைபோடுகிறவர்கள் ஏராளம்.

வியாபாரத்தில் ஒவ்வொரு பொருள் மீதும் இலாபம் வைத்து விற்பதுதான் தர்மம். ஆனால் வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இலாபம் பார்த்துச் செயற்படுவது விவேகமானது.

தங்களைச் சுற்றி இப்படிச் சிறு வட்டத்தைத் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்டு,அதைக் குறுகிய மனப்பான்மையுடன் சுற்றி வருபவர்கள் மற்றவர்களின் இதயத்தில் இடம்பிடிப்பது அரிது. வாழ்வில் முன்னேறுவது என்பது அதைவிட அரிது.

மற்றவர்கள் நினைத்துக் கொள்ளும்படியான செயலைச் செய்துவிட்டு உடனே, அதற்கு நாமே ஒரு விலையை நிர்ணயிப்பது என்பது விவேகமற்ற செயல்.

ஒருவேளை அந்தவிலை கிடைத்து விட்டால், அத்தோடு தீர்ந்தது கணக்கு. கிடைக்கா விட்டாலோ, நற்பெயரும் மிஞ்சாது. இரண்டு வகையிலும் நஷ்டம்.

மாறாக,எதையுமே எதிர்பாராத பட்சத்தில் மற்றவர்களின் மனத்தினுள்ளே புதைந்து கிடக்கும் நன்றியுணர்வை வெளிக் கொணர முடியும். மாற்றுச் செயலாக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உண ர்வு அவர்களிடத்தில் நிறைந்து நிற்கும். அது மிகப் பெரிய பலனாகவும் அமைந்துவிடக்கூடும்.

அத்தகைய பலன் எந்தத் திக்கிலிருந்து யார் மூலம் வருமென ஊகித்தறியவே முடியாத ஒன்றாக இருக்கும்.

மனத்தை விசாலப்படுத்திக் கொள்ள வேண்டும். சுயநலம் உள்நோக்கம்,எதிர்கால எதிர்பார்ப்பு ஆகியவற்றை மனவறையிலிருந்து ஓட்டிவிட வேண்டும்.

வாழும் நாளெல்லாம் எத்தனை உள்ளங்களில் குடிபுக முடியுமோ அதற்கே முயல வேண்டும்.

மற்றவர்களின் நன்மை கருதிச் செயற்பட்டுக் கொண்டிருந்தால், அத்தகையவனின் தலையில் உலகம் மிளகாய் அரைக்கும் என வாதிடுபவர்கள் இருக்கிறார்கள்.

இருக்கலாம்.

நம்மை நஷ்டப்படுத்திக் கொண்டு செயற்படும் மனப்பக்குவம் இல்லாவிட்டாலும் இலாபத்தை எதிர்பாராமலாவது செயற்படலாம் அல்லவா?

இலாப நோக்கம் கருதிச் செய்யப்படும் ஒவ்வொரு செயலையும் கண்டு மற்றவர்கள் மனம் வெதும்பி வெறுத்து ஒதுக்கி விட்டால், பின்னர் எத்தகைய முயற்சியும் பயனற்றுப் போய்விடும்.

வியாபாரத்தில்கூட இலாபத்தைத் தவிர, நற்பெயரும் நான்குபேர் தொடர்பும் அவசியம்வேண்டும் என்கிறபோது,நடைமுறைவாழ்வில் வியாபார நோக்கம் எடுபடாமல் போகும் என்பது உறுதி.

**லேனா தமிழ்வாணன்**

# துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றக் கோரி நேற்றுப் போராட்டம்

## வடக்கு கல்வியமைச்சை முற்றுகையிட்ட ஆசிரியர்கள் விசாரணை அறிக்கையை துரிதப்படுத்தக் கோரிக்கை





துணுக்காய் வலயக் கல்விப் பணப்பாளர்மாலினிவெனிற்றனை இடமாற்றக் கோரியும் அவரின் அதிகார துஷ்பிரயோகம், நிதி ஊழல் மோசடி குற்றச்சாட்டுக் களுக்கான விசாரணை அறிக் கையை துரிதப்படுத்தக் கோரியும் செம்மணி வீதியிலுள்ள வடமாகாண கல்வி அமைச்சை முற்றுகை யிட்டு துணுக்காய் வலய ஆசிரி யர்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இந்த போராட்டம் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரது அலுவலகங்கள் முன பாகவும் முன்னெடுக்கப்பட்டன.

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 62 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ள னர். 2013 ஆம் ஆண்டு துணுக் காய் கல்வி வலயப் பணிப்பாள ருக்கு எதிராக அதிகார துஷ்பிர யோகம் மற்றும் நிதி ஊழல் மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுக்களை ஆசிரியர்கள் முன்வைத்தனர்.

ஆனால் இதுவரை அவருக்கு எதிராக எந்தவொரு விசாரணை நடவடிக்கையும் எடுக்கப்படவி ல்லை .

எனவே குறித்த பணிப்பா ளரை உடனடியாக இடமாற்றக் கோரி ஆசிரியர்கள் குறித்த போராட் டத்தை முன்னெடுத்தனர். இப் போராட்டத்தில் கலந்து கொண்டி ருந்த ஆசிரியர்கள், வேண்டாம் வேண்டாம் மாலினி வேண்டாம், ஆசிரியர்களின் உரிமைகளை பாதுகாருங்கள், மாகாண அரசே ஆசிரியர்களை ஏமாற்றாதீர்கள், வடமாகாண அரசே ஆசிரியர் களுக்கு பதில் சொல், எங்கே எங்கே நடந்த விசாரணை எங்கே?, வடக்கு மாகாண கல்வி அமைச்சே எமக்கு துரோகம் செய்யாதே, உயர்த்து உயர்த்து ஆசிரியர் வாய்மையை உயர்த்து, வலய வாரியம் வேண் டும் மாலினி வாரி யம் வேண்டாம், மாற்று மாற்று வலயக்கல்வி பணிப்பாளரை மாற்று, நடவடிக் கை எடுப்பதற்கு ஏன் தயக்கம்? உன க்கும் ஊழலில் பங்குண்டா? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர்.

ஆசிரியர்களின் இந்த போரா ட்டத்தால் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் பெரும்பாலா னவை செயலிழந்து காணப்பட்டன. சுமார் 300 வரையிலான ஆசிரி யர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் ஏனைய ஆசிரியர்கள் சுகயீன விடுமுறையில் பாடசாலை செல் வதனை தவிர்த்து கொண்டதாக வும் இலங்கை ஆசிரியர் சங்கத் தின் யாழ்.மாவட்ட தலைவர் தெரிவித்தார்.

மேலும் குறித்த பணிப்பாளரை இடமாற்றக் கோரி மகஜர் ஒன்றை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோருக்கு கையளிக்க ஆசிரியர்கள் முயன்ற போதிலும், அவர்கள் அலுவலகத் தில் இல்லாத காரணத்தால் அவர் களது உதவியாளர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. மேலும் பிற்ப கல் இரண்டு மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே யினையும் சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத் திருந்தனர்.

மேலும் இப்போராட்டத்தின் மூலம் தமக்கு முடிவு கிடைக்காத விடத்து தமது போராட்டம் தொட ர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

எங்கள் மாகாண சபை என்று தான் நாங்கள் மாகாண சபை யிடம் முறையிட்டோம், எங்க ளுக்கு நேரடியாக வடக்கு மாகாண ஆளுநரிடம் முறையிட தெரியும், ஆனால் எங்கள் பிரச்சினை களை நாங்களே தீர்க்க வேண் டும் என நினைத்து தான் மாகாண சபையிடம் முறையிட்டோம் என தெரிவிக்கும் ஆசிரியர்கள், இவர் கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் ஆளுநரிடம் தான் முறை யிட முடியும் வேறு வழியில்லை என அவர்கள் மேலும் தெரி வித்தனர்.

இதேவேளை துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் சம் பந்தமாக ஒழுக்காற்று நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு ஒழுக்காற்று குழுவினரால் பிரதம செயலரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதம செயலர் தற்போது கொழு ம்பில் உள்ளமையால் அவர் திரும்பியதும் உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படும்.

குற்றங்கள் இழைத்த எவரை யும் காப்பாற்ற வேண்டிய அவசி யம் எமக்கில்லை என போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண முத லமைச்சர் தெரிவித்துள் ளார். (இ-4)

# தமிழ் சினிமா வரலாறு

125

## மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த ‘அலிபாபாவும்40 திருடர்களும்’ தமிழில் முதல் வண்ணப்படம்

ஆக, எம்.ஜி. ஆர். வந்தால் தான் படப் பிடிப்பு. நாள் குறித் தாயி ற்று. அவர் படப் பிடிப்புக்கு வர வில்லை.

படப்பிடிப்பை சுந்தரம் ஒத்தி வைத்து விடுவார் என்று எல்லோரும் நினை த்தார்கள். ஆனால் நடந்தது வேறு.

எம்.ஜி.ஆருக்கு பதிலாக ஒரு டூப் நடிக்ரைப்போட்டு பாட்டையும் சண்டைக் காட்சி யையும் டி.ஆர்.எஸ்.எடுத்து படத்தை முடித்து விட்டார்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து எம்.ஜி.ஆர். படப் பிடிப்புக்கு வந்தார். படப் பிடிப்பு நடைபெறும் அறி குறியே தெரியவில்லை. உண் மையைத் தெரிந்து கொள்ள டி.ஆர்.எஸ்.எதிரில் போய் நின்றார் எம்.ஜி.ஆர். வேறு யாரும் வாயைத் திறக்க மாட்டார்கள் என்பதை அவ ரும் அறிவார்.

என்ன ராமச்சந்திரன்? படப்பிடிப்பு முடிந்து விட் டது. முடிந்த படத்தை பார் த்து விட்டு போங்க என்றார் டி.ஆர்.சுந்தரம்.

எம்.ஜி.ஆர். படத்தைப் பார்த்தார். டூப் நடிகர் எங்கே நடித்திருக்கிறார் என்றே தெரியவில்லை. அவ்வளவு கச்சிதமாகப் படம் எடுக்கப் பட்டு இருந்தது.

இந்தச் சம்பவம் காரண மாக மாடர்ன் தியேட்டர்ஸ்- எம்.ஜி.ஆர்.இடையேயான தொடர்பு விட்டுப்போயிற்று. மனக்கசப்புடன் தான் அவர் வெளியேறினார் என்றால் அது தான் உண்மை.

### வசனத்தில் சிக்கல்

இதற்கு முன்னால் படப் பிடிப்பு சமயத்திலும் ஒரு சின்ன சிக்கல்.

அலிபாபாவில் ஒரு வச னம் அல்லா மீது அணையாக என்று ஆரம்பிக்கும் அந்த வசனத்தைப் பேசத் தயங் கினார் எம்.ஜி.ஆர். அவர் தி.மு.க.வில் சேர்ந்திருந்த காலம் அது.

வசன கர்த்தாவிடம் அம் மாவின் மீது ஆணையாக என்று மாற்றித் தரச் சொன் னார். ஆனால் வசனகர்த்தா ஏ.எல்.நாராயணன் அதற்கு உடன்படவில்லை. முதலாளி



யைக் கேட்டு விடுங்கள் என்று கூறி நழுவி விட்டார்.

படப்பிடிப்புத் தினம். எம்.ஜி.ஆர்.நடிக்கத் தொடங் கியதும் அம்மாவின் மீது ஆணையாக இந்த அலி பாபா.... என்று வசனத்தை ஆரம்பிக்க, டைரக்டர் டி.ஆர். சுந்தரம் கட்...கட்... என்று சொல்லி விட்டார்.

இங்கே பேச வேண்டிய வசனம் அம்மாவில் ஆரம் பிக்காது. அல்லாவில்தான் ஆரம்பிக்க வேண்டும். அலி பாபாவுக்கு அல்லாதான் தேவை... வசனத்தை மாற்றும் வேலை எல்லாம் இங்கே வேண்டாம் என்று கூறிவிட்டார்.

இவ்வாறு டி.ஆர்.சுந்தரத் தின் வாழ்க்கை வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

அலிபாபாவும் 40 திருட ர்களும் படம், மாடர்ன் தியேட்டருக்கு அகில இந்திய ரீதியில் புகழ் தேடித் தந் தது.தெலுங்கிலும் இப் படம் டப் செய்யப்பட்டு வெற்றிக ரமாக ஓடியது.

அலிபாபாவைத் தொடர் ந்து மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த படம் பாசவலை. ஜெமினியில் நிரந்தர நடிகராக இருந்து வந்த பின் மாடர்ன் தியேட்டர்சில் நடித்த முதல் படம்.

அலிபாதுஷா என்ற பழைய நாடகக் கதையைத் தழுவி எடுக்கப்பட்ட படம் இது. எம்.கே.ராதாவுடன் ஜி.வரலட் சுமி, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நடித்தனர். ராஜா மணி என்ற நடிகை லொள்... லொள்...லொள் என்று பாடிய பாட்டு மிகப் பிரபலம்.

(தொடரும்)

# 2020 இல் புகைப்பிடித்தல் முற்றாகத் தடை செய்யப்படும்

## சுகாதார அமைச்சு தகவல்

**(கொழும்பு)**

**எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் புகைப் பிடித்தலை முற்று முழுதாக தடை செய்ய சுகாதார, சுதேச வைத்திய மற்றும் போசாக்கு அமைச்சு தீர்மானித் துள்ளது என சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.**

கொழும்பு சுகாதார கல்விக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொற்றாத நோய்களை கட்டுப் படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இருதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், புற்று நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்றாத நோய்கள் பரவுவதற்கு காரணமாகிய புகைப் பிடித்தலை முற்றாகத் தடை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

புகைப்பிடித்தலை முற்று முழுதாக தடை செய்யும் யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

தொற்றா நோய்கள் இலங்கையில் துரித கதியில் அதிகரித் துள்ளன. இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் புகைப்பிடித்தலுக்கு தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொலநறுவை உள்ளிட்ட அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புகைப்பிடித்தலுக்கு முற்று முழுதாக தடை விதிக்கும் திட்டம் பற்றிய விபரங்களை அவர் வெளியிடவில்லை.

நடைமுறைச் சாத்தியப்பாட்டுடன் இந்த புகைப்பிடித்தலுக்கான தடையை எவ்வாறு அமுல்படுத்துவது, அது வெற்றியளிக்கக் கூடிய சாத்தியம் உண்டா? என்பது பற்றிய விளக்கத்தை பணிப்பாளர் நாயகம் டாக்டர் மஹிபால தெளிவுபடுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக மேலும் தெரிய வருகிறது. (இ-5)

### கடத்தப்பட்டு காணாமற்போன

## பிரகீத் எக்னெலிகொட வழக்கு 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போன சம்ப வம் குறித்த வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

ஹோமாகம நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதவான் ரங்க திஸாநாயக்க வழக்கினை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

திடமான சாட்சியங்கள் இன்றி வழக்கை தொடர்ந்தும் எவ்வளவு நாளைக்கு விசாரணை செய்வது என நீதவான் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்வரும் வழக்கு விசாரணை திகதியில் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் மூன்று இராணுவ வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் இந்த வாகனங்களில் ஒரே நாளில் 900 கிலோ மீற்றர் பயணம் செய்துள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என புலனாய்வுப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த விபரங்கள் அடங்கிய ஆவணங்களை படையினர் இது வரையில் வழங்கவில்லை. ஆவணங்களை வழங்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிடப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.


அதனையடுத்து, குறித்த ஆவணங்களை விசாரணைகளுக்காக வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 664

ரதி




ஜீவி



கம்சி

வாழ்வில் சிலநேரம்
தொடர் கஷ்டங்கள் வரலாம்..
அவற்றை நம்பிக்கையுடன்
சந்தியுங்கள்..
மனம் தளராதீர்கள்..
அவைதான் நாளை நாம்
பெறப்போகும்
வெற்றியின் படிக்கட்டுகள்..

கோபி




நிஷா




மது




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போர்க்குற்றவாளிகளின் கூடாரமாகும் இலங்கை



மேற்குலகின் அதிகாரத்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள், தமது சொந்த பூகோள-அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இலங்கைத் தீவு தொடர்பாக பொய்ப் பரப்புரை செய்கின்றன என்பது வெட்கம்கெட்ட செயலாகும்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட Red Flag ஊடகத்தில் TREVOR GRANT எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ மனோநிலையுடன் கூடிய மிகக்கொடிய ஆட்சி தற்போதும் இலங்கையில் தொடர்வதாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளதானது, இந்தியா மற்றும் அமெரிக்காவின் மறைமுக உதவியுடன் ஆட்சிக்கு வந்த இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் தொடர்பான மக்களின் நம்பிக்கையை தகர்க்கச் செய்துள்ளது.

முள்ளிவாய்க்கால் கரையோரத்தில் 70ஆயிரம் வரையான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட உள்நாட்டுப் போரானது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவிற்கு வந்தாலும் கூட, தமிழ் மக்கள் மீதான சிங்கள இரா்ணுவத்தின் ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் முடிவிற்கு வரவில்லை.

நீதி மற்றும் நல்லிணக்கம் போன்றன நாட்டில் நிலைநாட்டப்படும் என மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கிய போதிலும், இராணுவம் என்பது இலங்கை அரசாங்கத்திற்கு இன்னமும் மிக முக்கிய ஒன்றாகக் காணப்படுகிறது.

குறிப்பாக 2009 இன் ஆரம்பத்தில் இலங்கையின் தரை, கடல் மற்றும் வான் படையினர் ஒன்றாக இணைக்கப்பட்டு தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டும் எஞ்சியவர்கள் பாடசாலைகள், வைத்தியசாலைகள், கோயில்கள் மற்றும் திறந்த வெளிகளில் இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அடைந்த போது இலங்கை இராணுவத்தினர் எவ்வளவு முக்கியமாக விளங்கினார்களோ அதேயளவு முக்கியத்துவத்தையே உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தற்போதும் இவர்கள் பெற்றுக்கொள்கின்றனர் என்பதே உண்மை.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த மீறல்களில் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மற்றும் போர்க் கால இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் நாட்டின் முதன்மைப் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். உண்மையில் இவர்கள் இருவரும் இலங்கையில் நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் தற்போது ஹேக் நீதிமன்றின் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள்.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் இராணுவப் படைகளின் இரண்டாவது நிலைத் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், பீல்ட் மார்சல் நிலைக்குத் தரமுயர்த்தப்பட்ட சரத் பொன்சேகா கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுப் பின்னர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தீவிர யுத்த மீறல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தின் முதனிலைத் தளபதிகளாகச் செயற்பட்ட டயஸ் மற்றும் பொன்சேகா ஆகிய இருவரும் 'போர்த் தவிர்ப்பு வலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 3 இலட்சம் தமிழ்ப் பொதுமக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களாவர்.

இலங்கை இராணுவத்தின் 57ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட டயஸ், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் ஜேர்மனிக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டார். இவர் மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டிய அனைத்துலக் சமூகமானது இவர் மீது போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து இவர் இவரது இராஜதந்திரப் பதவியை இழக்க வேண்டியேற்பட்டது.

இதுமட்டுமல்லாது, இவர் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் காரணமாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் தமது நாடுகளுக்கான நுழைவிசாவை வழங்க மறுத்தன. டயஸ் மீது அனைத்துலக சமூகத்தால் யுத்தக் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், தீவிர சிங்களவர்கள் மத்தியில் யுத்தக் கதாநாயகனாக இவர் நோக்கப்படுகிறார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மற்றும் இனவாத சிங்களவர்கள் மத்தியில் டயஸ் ஒரு கதாநாயகனாகத் திகழும் அதேவேளையில், போருக்குப் பின்னான காலப்பகுதியில் பொன்சேகா பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

குறிப்பாக இவர் 2010இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனதிபதி மகிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டார். இதனால் இவரது இராணுவ நிலை, பதக்கங்கள், விருதுகள் போன்றன முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இவர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் சிறைவாசம் அனுபவித்தார்.

யுத்தத்தின் இறுதியில் சரணடைந்த புலி உறுப்பினர்க்களைக் கொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ உத்தர விட்டிருந்ததாக சரத் பொன்சேகா நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார். இதற்காக இவர் மேலும் மூன்று ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், சரத் பொன்சேகா அழுத்தத்தின் காரணமாக இக்கூற்றைப் பின்வாங்கியதால் தனது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.



தற்போது சரத் பொன்சேகா நாடாளுமன்றில் அங்கம் வகிப்பதுடன், பிராந்திய அபிவிருத்திக்கான அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். எனினும் இவர் தனது கைகளில் 70ஆயிரம் வரையான அப்பாவித் தமிழ் மக்களின் இரத்தக்கறையைக் கொண்டுள்ளார் என்பதை அனைத்துலக ஊடகங்களில் ஒருபோதும் கூறமுன்வரவில்லை.

இந்த விடயம் இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கும் பொருந்தும். ஏனெனில் இவர் தனது தேர்தல் பரப்புரையின் போது போரின் இறுதிக்கட்டத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்டதாக தற்புகழ்ச்சியுடன் தெரிவித்தார். அத்துடன் ராஜபக்ஷாக்கள், பொன்சேகா, டயஸ் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் போன்று மைத்திரியும் போர்க் காலத்தில் கட்டளைகளை வழங்கியதன் மூலம் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்பதே உண்மை.

இந்நிலையில் அனைத்துலக நீதிபதிகள் அடங்கிய போர்க் குற்ற விசாரணைக் குழுவை அமைப்பதற்கு தடையாக மைத்திரி உள்ளார் என்பது ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல. சில மாதங்களின் முன்னர் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது அனைத்துலக நீதிபதிகளை போர்க் குற்ற விசாரணைக்கு அனுமதிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது இவர் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதியை நிராகரிக்கிறார் என்பதிலிருந்து இவரது நிலைப்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.



இலங்கை ஜனாதிபதியின் பெயரில் மாற்றம் ஏற்பட்டுள்ளதே தவிர, வேறெதிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதே உண்மை. மைத்திரி தற்போது தான் ஓடி ஒளிந்து கொள்வதற்கான துளை ஒன்றைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்.

இதைவிட, மேற்குலகின் அதிகாரத்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தா னியா மற்றும் நடுத்தர அதிகாரங்களைக் கொண்ட அவுஸ்திரேலியா போன்றன இலங்கையில் சிறந்த மாற்றங்கள் ஏற்படுவதாக அனைத்துலக சமூகத்திற்கு பொய்யுரைத்து வருகின்றன. இந்த நாடுகள் தமது சொந்த பூகோள-அரசியல் நலன்களை அடைந்து கொள்வ தற்காகவே இலங்கைத் தீவு தொடர்பாக பொய்ப் பரப்புரை செய்கின்றன என்பது வெட்கம்கெட்ட செயலாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை மற்றும் அதன் பிராந்தியம் மீதான சீனாவின் செல்வாக்கைக் குறைப்பதற்காகவும் அவுஸ்திரேலியாவானது தனது கடற்பரப்பிற்குள் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நுழைவதைத் தடுப்பதற்காகவுமே இலங்கை தொடர்பாக பொய்ப் பிரசாரம் செய்கிறார்கள்.

போர்க் குற்றவாளிகளைத் தாம் பாதுகாக்கிறோம் என்பதை இந்த நாடுகள் கவனத்திற் கொள்ளவில்லை. 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைக்கு அனைத்துலக சமூகமும் தனது ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி வருகிறது என்பதற்கு இது பிறிதொரு எடுத்துக்காட்டாகும்.

**நித்தியபாரதி**

# பயனாளிகளின் பெயர் விபரம்

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும்புனர்வாழ்வுக்குரியஅமைச்சு,மாற்றுஆற்றல் உடையவர்களுக்கு தலா 12,500 ரூபாவீதம்வழங்கிவருகின்றது.

இதன் பிரகாரம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 18 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பயனாளிகளுக்கான கொடுப்பனவு தற்போது வழங்கப்படவுள்ளது.

அப்பயனாளிகள் உடனடியாக சமூகசேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி உதவிப் பிரதேச செயலர்ஸ்ரீராஜீவ் அறிவித்துள்ளார்.

பயனாளிகள் பெயர் விபரம் பின்வருமாறு,

ஜெயராசா மணிவண்ணன்-கட்டைவேலி, கிட்டினன் ஜெயந்தி -அல்வாய் கிழக்கு, சண்முகநாதன் சூரியகுமார்-கரணவாய் தெற்கு, ஜெயசுதன் உதயமலர்-கரணவாய் தெற்கு,காங்கேசு இரஜீகரன் -கரணவாய் தெற்கு, கந்தையா பொன்னம்மா -கரவெட்டி கிழக்கு,பெரியான் கந்தசாமி -கரவெட்டி கிழக்கு ,நாகமுத்து தங்கச்சியம்மா-கரணவாய் மேற்கு, ஆல்வாப்பிள்ளை பரமநாதன்-அல்வாய் தெற்கு. (இ

★★★★★★★★★★

வடக்கு சமுதாய சேவைத் திணைக்களம் சுயதொழிலை மேற்கொள்ள 4 பயனாளிகளுக்கு தலா ரூ.30 ஆயிரம் வீதம் வழங்கவுள்ளது. இப்பயனாளிகளை உடனடியாக சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் எஸ். ராஜீவ் கேட்டுள்ளார்.


சுந்தரலிங்கம் கிருஷ்ண குமாரி(அல்வாய் கிழக்கு-ஆடு வளர்ப்பு), திரேசம்மா பேரின்பநாதன் (கட்டைவேலி-மாடு வளர்ப்பு),ஆனந்தராசா ரஜனி (இணையாணன்- ஆடு வளர்ப்பு) ,செல்வராசா சரஸ்வதி (இராசகிராமம் -மீன்வளர்ப்பு).(இ-60)

# பொதுக்கூட்டம்

கரவெட்டி பிரதேசத்தின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ பிரதம விருந்தினராகவும் பிரதேச கணக்காளர் எஸ். சிவரஞ்சனும் யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினரான வி.ஸ்ரீசக்திவேலும் யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளருமான கே.கதிரமலையும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு சங்க உறுப்பினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ



# உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண நூதன இராஜகோபுர நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.38 மணி முதல் 10.48 மணிக்குள் நடைபெற முருகன் திருவருள் கூடியிருப்பதால் இதுபற்றி இக்கட்டுரை வெளிவருகின்றது.

சீரும் திருவும் பொலிந்து விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் பல வளங்கள் நிரம்பப் பெற்ற உசன் ஊரின் மத்தியில் அற்புத இம் முருகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார்.

''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்''

என்ற குறள் வாயிலாக கூறுகின்றார்.திருவள்ளுவப் பெருமான் கல்வியும் கடவுள் வழிபாடும் அதாவது அறிவும் ஆன்மீகமும் ஒன்றிற்கொன்று ஆதாரமாகி இருப்பதால் ஒரு கிராமத்திற்கு இவை இரண்டும் இருகண்களுக்கொப்பானவை என்பது வள்ளுவப் பெருந்தகைகூறும் அறிவுரையாகும். மூதறிஞர் ஔவைப்பிராட்டி கூறுகிறார் ஆன்மீகத்தைக் கொடுக்கும் ஆலயமும் கல்வியைக் கொடுக்கும் வித்தியாலயமும் இல்லாத ஊரில் மக்கள் குடியிருக்க வேண்டாம். இவ்வூர்கள் சுடுகாட்டுக்குச் சமனானவை என்பது இவர் உபதேசமாகும்.

உசன் கிராமத்தைப் பொறுத்தளவில் இப்புனித பணிகளை உசன் கந்தப்பெருமான் ஆலயமும் மற்றும் இக்கிராமத்தில் உள்ள ஏனைய ஆலயங்களும் கல்வி அறிவை உசன் இராமநாதன் மகாவித்தியாலயமும் குறைவின்றி இன்று வரை வழங்கி வருகின்றன.

உசன் வரலாற்று நூலில் இருந்து இவ்வாலய வரலாற்றைப் பார்ப்போமாயின் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு வாழ்ந்த வினாசித்தம்பி உடையார் தற்போது கந்தசுவாமி கோவிலில் இருக்கும் காணியைத் துப்புரவு செய்விக்கும் போது தற்போது நிற்கும் வில்வமரத்துக்குப் பக்கத்தில் மண்ணுக் கடியில் ஓர் அற்புத வேலைக் கண்டெடுத்தார். பின்பு இதே இடத்தில் ஓர் சிறு கொட்டில் அமைத்து தான் கண்டெடுத்த வேலை வைத்து ஓர் சைவ அடியார் மூலம் பூசை செய்வித்து வந்தார். அப்போது பூசை செய்த இவ் அடியாரை எல்லோரும் பூசாரியார் என அன்பாக அழைத்தார்கள். பின்பு வேலுப்பிள்ளை உடையார் மகன் வைத்தியலிங்கம் அவர்கள் வேல் இருந்த கொட்டிலை நிரந்தரக் கட்டடமாகக் கட்டி இவ்வடியாரைக் கொண்டு தொடர்ந்து பூசையைச் செய்வித்தார்.

இந்தக்கட்டடம் இருந்த இடத்தை மடத்துக் கந்தசுவாமி கோவில் எனவும் இவ்வூர் மக்கள் அழைத்து வந்தனர். இம்மண்டபம் இன்றும் வசந்த மண்டப வெளிவாயில் கட்டடத்திற்கு முற்புறத்தில் உள்ளது. தர்மகர்த்தாக்கள் இவ்வரலாற்றுக் கட்டடத்தை இடிக்காமல் பாதுகாத்து வருகின்றனர்.

காலப்போக்கில் இங்குள்ள வேலாயுதப் பெருமானுக்கு தர்மகர்த்தாவாக இருந்த வி.வைத்தியலிங்கம் அவர்கள் ஆகமவிதிப்படி தற்போதிருக்கும் இவ்வாலயத்தை கருங்கல்லால் கட்டி 1924 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தையும் செய்வித்து வைத்தார்.

தற்போது அமைத்த இராஜகோபுரத்துக்கு அத்திவார வேலையை 1924 இல் முடித்து வைத்தார்.முகப்பிற்கு ஓர் சிறிய கிளிக் கோபுரத்தையும் அமைத்து இதற்கு மேல் காணப்படும் கருங்கல்லில் 1924 என்று எழுதப்பட்டிருந்தமையை இன்றும் காணலாம்.

இங்குள்ள மூர்த்திகள் மூலமூர்த்தி வேலாயுதப் பெருமாள், பரிவாரமூர்த்திகள் பிள்ளையார், வள்ளி, தெய்வானை, சமேத சண்முகப்பெருமான், சந்திரசேகரர், சிவகாமசுந்தரேஸ்வரி சமேத நடராசப்பெருமாள், பழனியாண்டவர், பூமாதேவி மகாதேவி சமேத விஷ்ணு பெருமான், வைரவப்பெருமானுடன் நாகதம்பிரான் சமய குரவர் நால்வர், துர்க்கை, இலக்குமி, சரவஸ்வதி எழுந்தருளி, சண்டேசுரர் ஆகிய மூர்த்திகள் இங்குள்ளனர். ஈழத்தில் உண்டியல் இல்லாத ஆலயமாக அன்றும் இன்றும் இவ்வாலயம் மட்டுமே இருந்து வருகின்றது. பெரியார் வைத்தியலிங்கம் இவ்வூரில் ஓர் சைவப்பாடசாலை இல்லாத குறையை நன்கறிந்து தனது நட்புக்குரிய சேர்.பொன் இராமநாதனின் அனுமதியோடு அவர் முகாமில் பெரியார் வைத்தியலிங்கம் இதற்குரிய காணியையும் கட்டடத்திற்கு வேண்டிய மூலப் பொருட்களையும் கொடுத்து இராமநாதனால் அமைக்கப்பட்ட மூன்றாவது பாடசாலையாக உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் இருந்து வருகின்றது.

இப்பாடசாலையை அரசாங்கம் எடுக்கும் வரை சேர்.பொன் இராமநாதன், லேடி இராமநாதன், இவர் தம்மருமகள் மந்திரி நடேசன் அவர்கள் பாடசாலையை மேற்பார்வை செய்ய வரும் போது உசன் கந்தப்பெருமானை முதல் தரிசனம் செய்தே உள்ளூர் முகாமையாளர் வைத்திலிங்கத்துடன் பாடசாலைக்கு செல்வார்கள்.

உள்ளூர் முகாமையாளர்களாக ஆலய அறங்காவலர்களே இருந்து வந்தனர். பெரியார் வி.வைத்திலிங்கம் அவர்கள் முருகன் ஆலயத்தையும் பாடசாலையையும் தனது இருகண் போல் பாதுகாத்து வந்தார். இவர் பரம்பரை ஆலய அறங்காவலர்களும் இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

*அருள் தந்து வினை தீர்க்கும் கலியுகவரதனே உசன் கந்தா*
*அருள் வேண்டி உன்மணியோசை கேட்டு கூடும் அடியவரின்*
*இருள் அகற்றி ஒளி கொடுத்து வாழவை முருகையனே*
*கருணைக்கடலே உன்புகழ் காலத்தால் அழியாதப்பா.*

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''

க.பேரம்பலம்
ஓய்வுநிலை அதிபர்
யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

# செய்தித்துளிகள்

## கிரிவான பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

கொஸ்மோதர கிரிவான கங்கவத்த பகுதியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் இரக்குவான பிரதேசத்தை சேர்ந்த நபருடையது என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-5)

## டிப்பர்- ஆட்டோ மோதி விபத்து; மூவர் காயம்

அம்பாந்தோட்டை கிரிபட்டிய பிரதேசத்தில் டிப்பர் மற்றும் ஆட்டோ மோதி நேற்றுக்காலை விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மூவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## சம்பிக்கவின் தொலைபேசி அறிக்கையினைப் பெறவும்

ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தொலைபேசி அறிக்கையை விசாரணை செய்ய கொழும்பு மேலதிக நீதவான் சந்தன கலங்சூரிய நேற்றுமுன்தினம் வெலிக்கட பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளார.

குறிப்பிட்ட தொலைக்காட்சியில் பதிவு செய்த உரிமையாளர் பெயர், முகவரி, அதன் எம். இலக்கம், சம்பவம் நிகழ்ந்த இரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரையான காலப்பகுதியில் அந்த தொலைபேசியிலிருந்து பெற்றுக் கொண்ட மற்றும் உள்வந்த அழைப்புக்கள் என்பன தொடர்பான விபரங்களைப் பெற்றுத் தருமாறும் குறிப்பிட்ட தொலைபேசி நிறுவனத்திடம் வழங்குமாறும் பொலிஸாரிடம் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (இ)

## மனைவியைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி கைது

அதிக மதுபோதையில் மனைவியை மிகவும் கொடூரமாக தாக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.நேற்று அதிகாலை நவ கத்தேகம பகுதியிலேயே இந் தச்சம்பவம் இடம்பெற்றுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதி காரி சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிபவர் என் றும் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நவகத்தேகம பொலிஸாருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பிற்கு அமைய குறித்த பொலிஸ அதிகாரியை கைது செய்ததாக வும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த நபரை கைது செய்யும் சந்தர்ப்பத்தில் இவர் அதிக மதுபோதை யில் இருந்ததாகவும் நவகத்தேகம பொலிஸார் தெரி வித்தனர். (இ-5)

## சதித்திட்டம் முறியடிப்பு

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள சோம்நாத் கோயிலின் மீது தாக்குதல் நடத்தவிருந்த தீவிரவாதிகளின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரியை முன்னிட்டும் குஜராத்தில் உள்ள சோமநாதர் கோயில் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதி தீட்டியிருந்தனர்.

இந்நிலையில் அவர்களது முயற்சியை முறியடித்தது மட்டுமல்லால் நேற்று 3 தீவிரவாதிகளையும் பொலிஸார் சுட்டுக்கொன்றனர். (இ-5)

# ஆபாசப்பட வெளியீடுகளில் சிறுவர்களைப் பயன்படுத்த தடை

## புதிய மசோதாவுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஆபாசப் படங்களில் சிறுவர்களைப் பயன்படுத்து வதைத் தடுக்கும் பொருட்டு புதிய ஆபாச வெளியீடுகள் தொடர்பான மசோதா நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் அமைச் சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆபாசப் படங்களில் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட உள்ளடக்கங்கள் மற்றும் சிறுவர்களை ஆபாச காட்சிகளுக்கு உட்படுத்தல் என்பன இந்த மசோதா மூலம் தடை செய்யப்படவுள்ளது.

குற்றவியல் சட்டக் கோவை மற்றும் 1972 ஆம் ஆண்டு ஆபாச வெளியீடுகள் தொடர்பான சட்டங்கள் என்பவற்றில் தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ள விடயங்கள் தற்போதைய சமூக நிலைமையில் சிறுவர்களைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாக இல்லை என்று அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (3)



# சிறுவர் அரங்கம்

1386

## பணமா? வேலையா?

அரியாங்குப்பம் என்னும் ஊரில ஜெய்சங்கர், விஷ்வா என்ற நண்பர்கள் வாழ்ந்து வந்தனர்.

இருவரும், மக்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள். அவர்கள் இருவரும் ஏழை மக்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தனர்.

ஒருநாள்-

நண்பா, நாமும் எவ்வளவோ காலமாக இந்த ஏழை மக்களுக்கு தொண்டாற்றி வருகிறோம். ஆயினும் இவர்களுடைய வறுமையைப் போக்க முடியவில்லை. இறைவன் என்னை கோடீஸ்வரனாகப் படைத்திருந்தால், என்னுடைய செல்வத்தையெல்லாம் எளிய மக்களுக்குக் கொடுத்து அவர்களுடைய துயரைப் போக்கியிருப்பேன என்றான் விஷ்வா.

விஷ்வா, நான் கூட இவ்வளவு நாட்களாக உன்னைப் போல்தான் நினைத்திருந்தேன். வறுமைக்குக் காரணம் பணம் இன்மை என்று நினைத்திருந்தேன். ஆனால், இன்று முதல் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். வறுமைக்குக் காரணம் பணம் இல்லாமை அன்று. வேலை இல்லாமை தான் என்றான் ஜெய்சங்கர்.



இதை நான் ஒப்புக் கொள்ள முடியாது என்றான் விஷ்வா.

நாம் ஏன் இதைப் பற்றி வீணாக விவாதித்துக் கொண்டிருக்க வேண்டும்? பேசாமல் ஒன்று செய்வோம். யாராவது ஓர் ஏழையிடம் சோதனை செய்து பார்ப்போம் என்றான் ஜெய்சங்கர்.

அது நல்ல யோசனை. என்னிடம் 2 ஆயிரம் ரூபாய் உள்ளது. அதை யாராவது ஓர் ஏழையிடம் கொடுத்துப பார்ப்போம் என்றான் விஷ்வா.

ஜெய்சங்கரும் அதற்கு ஒப்புக்கொணடான்.

விஷ்வாவும், ஜெயசங்கரும் ஓர் ஏழையைத தேடிக் கண்டுபிடித்தனர். விஷ்வா அந்த ஏழையிடம், ஐயா என்னிடம் 2 ஆயிரம் ரூபாய் இருக்கிறது. அதனை உங்களுக்குத் தருகிறேன். ஏதாவது ஒரு சிறு தொழில் செய்து உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள் என்று தன்னிடமிருந்த 2 ஆயிரம் ரூபாயை அவனிடம் கொடுத்தான்.

2 ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்ட ஏழை, விஷ்வாவை வாயார வாழ்த்தினான். பணம் கைக்கு வந்ததும், வீட்டுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையெல்லாம் வாங்கிப் போட்டான். நல்ல துணிமணிகள வாங்கிக் கொண்டான். மதியுள்ள பணத்தில்என்ன தொழில் செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை. அதையும் சாப்பிட்டு தீர்த்தான்.

சில நாட்கள் சென்ற பிறகு ஜெய்சங்கரும், விஷ்வாவும் அந்த ஏழையைக்காண வந்தனர். ஏழையின் போக்கிலே எவ்வித மாறுதலும் இல்லாததைக் கண்டு விஷ்வா திடுக்கிட்டான்.

நான் கொடுத்த 2 ஆயிரம் ரூபாய் என்ன ஆயிற்று? என்று கேட்டான் விஷ்வா.

அது எவ்வளவு நாளைக்கு வரும்? பத்து, பதினைந்து நாட்களுக்குள்ளாகவே செலவாகி விட்டது என்றான் அந்த ஏழை.

சரி, அது போனால் போகட்டும் நீ என்னுடன் வா, நான் உனக்கு உதவி செய்கிறேன், என்று கூறி அந்த ஏழையை கடை வீதிக்கு அழைத்துச் சென் றான் ஜெய்சங்கர்.

நூல் நூற்கும் இராட்டினங்கள் இரண்டை வாங்கினான். இரண்டு, மூன்று தக்ளிகளையும், கொஞ்சம் பஞ்சையும் வாங்கிக் கொண்டான். அனைத்தையும் அந்த ஏழையிடம் கொடுத்து, இராட்டினத்தின் மூலமும் தக்ளியின் மூலமும் நூல் நூற்க அவனுக்கு கற்றுக் கொடுத்தான். பின்னர், ஐயா பஞ்சிலிருந்து நூற்கும் நூலை கொடுத்தால் பணம் கொடுப்பார்கள். அவற்றைக் கொண்டு நீங்கள் பிழைத்துக் கொள்ளலாம், என்று ஏழையிடம் கூறினான் ஜெய்சங்கர்.

மாதங்கள் சில கடந்தன-

விஷ்வாவும், ஜெய்சங்கரும் அந்த ஏழையின் வீட்டுப் பக்கம் மீண்டும் வந்தனர். வீட்டுக்குள்ளிருந்து தறியின் ஓசையும், இராட்டினம் சுற்றும் ஓசையும் கேட்டது. இருவரும் உள்ளே நுழைந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

அந்த ஏழை இப்போது மலர்ந்த முகத்துடன் காணப்பட்டான். அவன் முகத்தில் மகிழ்ச்சி ததும்பி கொண்டிருந்தது. தறியில் உட்கார்ந்து அவன் துணி நெய்து கொண்டிருந்தான். மற்றொருபுறம் அவன் மனைவியும், மூத்த மகனும் ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தனர். சிறிய பிள்ளைகள் இரண்டு பேர் தக்ளிகளில் நூல் நூற்றுக் கொண்டிருந்தனர். பெரிய பெண் ஒருத்தி நூற்ற நூல்களையெல்லாம் சிட்டமாக்கிக் கொண்டிருந்தாள். இப்போது அவன் வீட்டில் வறுமை இல்லை.

விஷ்வாவையும், ஜெய்சங்கரையும் கணடதும் ஏழை தறியிலிருந்து எழுந்து வந்தான்.

நீங்கள் செய்த உதவியை நான் மறக்க மாட்டேன். நூல் நூற்று அவற்றின் மூலம் கொஞ்ச நாள் மகிழ்ச்சியாகக் காலம் தள்ளினேன். திடீரென்று ஒருநாள் நூலை விலைக்கு வாங்கிக் கொள்ளும் அந்தக் கடையை மூடிவிட்டனர்.

உடனே எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. கையிலிருந்த பணத்தையெல்லாம் போட்டு ஒரு தறி வாங்கிப் போட்டுவிட்டேன். அதில் நெய்வதற்கும் கற்றுக் கொண்டேன். இப்போது துணியாகவே விற்பனை செய்து வருகிறேன். நன்கு விற்பனையாகிறது என்று கூறினான் அந்த நெசவாளி.

பின்னர், அந்த நெசவாளி இருவருக்கும் குடிப்பதற்கு பானங்கள் கொடுத்தான். பின்னர் வீட்டுக்குள் சென்று 2 ஆயிரம் ரூபாய் எடுத்து வந்து விஷ்வாவிடம் கொடுத்து, ஐயா நீங்கள் கொடுத்த 2 ஆயிரம் ரூபாயைத் திருப்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்றான்.

மற்றொரு 2 ஆயிரம் ரூபாயை ஜெய்சங்கரிடம் கொடுத்து, நீங்கள் எனக்கு வாங்கிக் கொடுத்த சாமான்களுக்கான தொகை இது என்று கூறினான்.

பின்னர் இருவரும் அந்த நெசவாளியிடம் விடை பெற்றுக்கிளம்பினர்.

நண்பா, நீ சொன்னது உண்மைதான். வறுமைக்குக் காரணம் பணம் இல்லாமை அன்று வேலை இல்லாமைதான் என்றான் விஷ்வா.

## 03.2016 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1776 - அமெரிக்கப் புரட்சி: பிரித்தானியப் படைகள் மசாசுசெட்சின் பொஸ்டன் நகரை விட்டு அகன்றனர்.
- 1805 - நெப்போலியன் தலைவனாக இருந்த இத்தாலியக் குடியரசு, இத்தாலியப் பேரரசு ஆனது. நெப்போலியன் அதன் பேரரசன் ஆனான்.
- 1845 - இறப்பர் பட்டி (rubber band) கண்டுபிடிக்கப்பட்டது.
- 1861 - இத்தாலியப் பேர்ரசு (1861-1946) அமைக்கப்பட்டது.
- 1886 - மிசிசிப்பியில் 20 ஆபிரிக்க அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.
- 1891 - பிரித்தானியாவின் எஸ்எஸ் யூட்டோப்பியா என்ற கப்பல் கிப்ரால்ட்டர் கரையில் மூழ்கியதில் 574 பேர் கொல்லப்பட்டனர்.
- 1919 - றோவ்லட் சட்டத்தை எதிர்த்துப்பிரச்சாரம் செய்வதற்காக மகாத்மா காந்தி சென்னை வந்தார்.
- 1942 - மேற்கு உக்ரேனின் லிவிவ் என்ற இடத்தைச் சேர்ந்த யூதர்கள் கிழக்கு போலந்தில் பெல்செக் என்ற இடத்தில் வைத்து நாசி ஜெர்மனியரினால் நச்சு வாயு செலுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1950 - கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஆய்வாளர்கள் கலிபோர்னியம் என்ற 98வது தனிமத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.
- 1958 - ஐக்கிய அமெரிக்கா வங்கார்ட் 1 செய்மதியை ஏவியது.
- 1959 - டென்சின் கியாட்சோ, 14வது தலாய் லாமா, திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தார்.
- 1966 - ஆல்வின் என்ற நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போன ஐக்கிய அமெரிக்காவின் ஐதரசன் குண்டை மத்திய தரைக் கடல் பகுதியில் ஸ்பெயினுக்கருகில் கண்டுபிடித்தது.
- 1969 - கோல்டா மெயர் இஸ்ரவேலின் முதலாவது பெண் பிரதமரானார்.
- 1970 - மை லாய படுகொலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடாமல் மறைத்த குற்றத்துக்காக அமெரிக்க இராணுவம் 14 இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியது.
- 1988 - கொலம்பியாவின் போயிங் விமானம் ஒன்று வெனிசுவேலாவின் எல்லையில் உள்ள மலை ஒன்றில் மோதியதில் 143 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988 - எரித்திரியாவில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியினர் (EPLF) எதியோப்பிய இராணுவ நிலைகளை நோக்கி மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1992 - ஆர்ஜெண்டீனாவில் இஸ்ரேல் தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டு 242 பேர் படுகாயமடைந்தனர்.
- 1996 - இலங்கை அணி ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்து துடுப்பாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.
- 2000 - உகாண்டாவில் கடவுளின் பத்துக் கட்டளைகளை மேம்படுத்தும் மத இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் 800 பேர் வரையில் அவ்வியக்கத் தலைவர்களினால் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள

- 1881 - வால்ட்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1973)
- 1920 - ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேசத்தின் தந்தை. (இ. 1975)

### இறப்புக்கள

- 1937 - ஒஸ்டின் சாம்பர்லேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர். (பி. 1863)
- 1956 - ஐரீன் ஜோலியோ-கியூரி, வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்றவர். (பி. 1897)
- 1983 - ஹால்டன் ஹார்ட்லைன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1903)

சிறிய விடயத்தில் நியாயம் தவறியவன் பெரிய விடயத்திலும் தொடர்வான்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சந்திரிகா அம்மையார் கூறிய அதிர்ச்சித் தகவல்

வடக்கு மாகாணத்தில் கணவனை இழந்த விதவைப் பெண்களிடம் இராணுவத்தினர் மட்டுமின்றி தமிழ் அதிகாரிகளும் பாலியல் லஞ்சம் கோருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

போரில் கணவனை இழந்த தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கையில் படையினர் ஈடுபடுவதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில்,

படையினர் மட்டுமல்ல; தமிழ் அதிகாரிகளும் விதவைப் பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறிய இக் கருத்துக்குறித்து தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியதாக உள்ளனர். மண் மீட்புக்காக போராடிய ஓர் இனம் எதிரிகளால் தோற்கடிக்கப்பட்ட நிலையில், தோற்றுப்போன தன் இனத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்க வேண்டிய கட்டத்தில் தானே தன் இனத்தை இழிவாக்கிக் கொள்வதென்பது ஒரு போதும் மன்னிக்கப்படக் கூடிய குற்றமன்று.

பொதுவில் போராட்டம் நடந்த நாடுகள், இடங்களைப்பார்க்கும் போது எதிரிகளால் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றதான வரலாறுகளே அதிகம்.

ஆனால் எங்கள் தமிழர் தாயகத்தில் மட்டும் எதிரிகளின் துரோகத்தனத்திற்கு ஈடாக தமிழ் இன அதிகாரிகளும் நடந்து கொள்கின்றனர் எனும் போது நெஞ்சு வெடித்துப் போகும் போல் உள்ளது.

போரில் சிக்குண்டு தன் கணவனை இழந்த அப்பாவிப் பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக அதிகாரிகளை நாடும்போது அவர்கள் பாலியல் லஞ்சம் கோருவதாக இருந்தால், இதைவிட அநியாயம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய குற்றச்சாட்டுத்தொடர்பில் வடக்கு மாகாண சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவத்தினர் மட்டுமன்றி தமிழ் அதிகாரிகளும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோருகின்றனர் எனவும் இது தொடர்பில் தன்னிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் சந்திரிகா அம்மையார் கூறியிருப்பதால் இது தொடர்பில் அவரிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அறிய வடக்கு மாகாண சபை உடனடியாக குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறியவிடயம், இராணுவத்திடம் மட்டும் குறை காணாதீர்கள்; தமிழ் அரச அதிகாரிகள் மட்டும் திறம் அல்ல என்பது போல அவரின் கருத்துரைப்பு அமைந்துள்ளதால், சந்திரிகா அம்மையார் கூறிய விடயம் நிச்சயம் விசாரிக்கப்படவேண்டும்.

இதற்காக வடக்கு மாகாண அரசு விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்து தமிழ் அதிகாரிகளால் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கான ஏற்பாட்டை அமுல்படுத்துவதும் அவசியமாகும்.

அத்துடன் பாலியல் லஞ்சம் கோரிய சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு முறையீடுசெய்வதற்கும் அது தொடர்பில் இரகசியம் பேணுவதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

இதை வடக்கு மாகாண அரசு செய்யத் தவறுமாயின், போர்க்குற்ற விசாரணைகள் நடைபெறும் போது இராணுவத்தினர் மட்டுமன்றி தமிழ் அதிகாரிகளும் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எனவே இது தொடர்பில் படையினர் மீது விசாரணை நடத்துவது பொருத்தமற்றது என்பதாக நிலைமை முடிக்கப்படும் என்பதால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை அறிவதும் உரிய நடவடிக்கை எடுப்பதும் மிகமிக அவசியமாகும்.

# மின் துண்டிப்பில் நாசவேலை

## இரா.அமைச்சர் நிரோஷன் கண்டிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் ஏற்பட்டிருந்த மின் துண்டிப்பு நாசகரமான செயல் என்பதற்கான ஆதாரபூர்வமான சாட்சிகள் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அனைத்து மட்டங்களிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் உரிய நபர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின் துண்டிப்பு தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஊடகங்களுக்கு அளித்த விசேட செவ்வியொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் குறைப்பாடுகளை தீர்ப்பதற்கு எமக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் அண்மையில் ஏற்பட்டிருந்த மின் துண்டிப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனை சாதாரண விடயமாக எடுக்க முடியாது. இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்திருந்தார்.

எனவே இது குறித்து மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் நாடு முழுவதும் ஏற்பட்டிருந்த மின் துண்டிப்பு நாசகரமான செயல் என்பதற்கான ஆதார பூர்வமான சாட்சிகள் உள்ளன.

எனினும் விசாரணைகளின் பின்னரே இதன் உண்மைத் தன்மை எமக்கு தெரியவரும் என குறிப்பிட்டார். (செ-12)

## நாட்டில் பொருளாதார பின்னடைவு!

நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கு அரசாங்கத்தின் தோல்வி காரணம் அல்ல என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, இலங்கையின் பொருளாதாரம் ஏதோ ஒரு பின்னடைவுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

பொருளாதார பின்னடைவு ஏற்பட்டிருக்குமாயின் அப்படியான சந்தர்ப்பத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாயினால் அதிகரித்தது தவறான தீர்மானம் அல்லவா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அமைச்சர்,

மக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு சம்பளத்தை அதிகரிக்கும் இடத்தில் நாங்கள் இருக்கின்றோமா என்பதுதான் பிரச்சினை.

சம்பளத்தை அதிகரிக்கும் நிலைமை நாட்டில் இல்லாத சூழ்நிலையில் அரசியல் போட்டிக்காக சம்பளத்தை அதிகரித்தால், அது மக்களை கஷ்டத்தில் தள்ளுவதாகும். இதுதான் நாட்டில் இன்று வரை நடந்து வந்துள்ளது என்றார். (செ-12)

## தகுதி இருப்பவருக்கு அதிர்ஷ்டம் இல்லை!

(கொழும்பு)

தகுதி இருப்பவர்களுக்கு அதிர்ஷ்டம் இருப்பதில்லை அதிர்ஷ்டம் இருப்பவர்களுக்கு தகுதி இருப்பதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக மகிந்த அமரவீர பதவி ஏற்றுக்கொண்ட நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைத்து உடன்படிக்கைகளையும் தாமே தயாரித்ததாகத் தெரிவித்த நிமால் சிறிபால,

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்காக முதலில் தமது பெயர் பரிந்தரைக்கப்பட்ட போதிலும், சுசில் பிரேமஜயந்தவே அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார் என ஆதங்கப்பட்டிருந்தார். (செ-12)

# நிஷாந்த ரணதுங்கவுக்கும் நேற்றுப் பிணை கிடைப்பு

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சி.எஸ்.என். தொலைக்காட்சி அலைவரிசையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷாந்த ரணதுங்கவுக்கு கடுவலை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் சரீரப்பிணையிலும் அவரை விடுதலை செய்ய கடுவலை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக, நிஷாந்த ரணதுங்கவுக்கு பிணை வழங்க கடுவலை நீதவானுக்கு அதிகாரம் இருப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

நிஷாந்த ரணதுங்கவிற்கு பிணை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவுக்கான தீர்ப்பை வழங்கும் போது கொழும்பு மேல் நீதிமன்ற நதிபதிஎம்.பீ.பிஎஸ். மொராயஸ் இவ்வாறு கூறியிருந்தார்.

இதன்பின்னரே கடுவலை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (செ-12)

## வாகனத்திலிருந்து வீதியில் கசிந்த எண்ணெய்

### பலர் விபத்தில் சிக்கினர்

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வாகனமொன்று கழிவு எண்ணெயை பாதுகாப்பான சீரான முறையில் எடுத்துச் செல்லாமையால் சுமார் 300 மீற்றர் தூரத்திற்கு எண்ணெய் நிலம் வழியே ஊற்றப்பட்டு அப்பாதை வழியே பயணித்த மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

சங்கானையிலிருந்து வட்டுக்கோட்டை வழியே பயணித்த பிக்கப் வாகனம் எடுத்துச் சென்ற கழிவு எண்ணெய் பீப்பாவை சரிவர மூடாததால் இவ்விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு சித்தன் கேணி சந்தியில் நிகழ்ந்துள்ளது.

இக்கழிவு எண்ணெயில் சறுக்குண்டு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 6 பெண்களும் 4 ஆண்களும் விபத்துக்குள்ளாகினர்.

இவற்றுள் 2, 3 மோட்டார் வண்டிகள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. (இ-17)

## பங்குச்சந்தை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமகால முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் துறைசார் நிபுணர்களால் நடத்தப்படும் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்.கிளை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என கிளை முகாமையாளர் திலியன் அறிவித்துள்ளார். (செ-12)

## சத்திய தரிசனம்



### கைகள் தந்த நோக்கம்

❖ பாலில் துளி விஷம் கலந்தாலும் வீணாகி விடும். அதுபோல, ஒரு தீய செயலில் ஈடுபட்டாலும் ஒழுக்கம் சிதைந்து விடும்.


❖ அன்பின் ஒளியால் தான் ஆண்டவனைக் காண முடியும். எங்கும் அன்பை விதைத்து அதை அறுவடை செய்யுங்கள்.

❖ பெற்றோரை நன்றியுணர்வுடன் பேணுங்கள். வாழ்வில் நேர்மையைப் பின்பற்றுங்கள்.

❖ பிறரைப் புறம் பேசுவதிலும், அவர்களது குறை காண்பதிலும் நேரத்தை வீணாக்காதீர்கள்.

❖ ஒரு வயிறு, இரண்டு கைகளைக் கடவுள் வழங்கி இருக்கிறார். இரு கைகளால் உழைத்தால் யாரும் பட்டினி கிடக்கத் தேவையில்லை.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடுவது ஏன்?

தமிழ கலாசாரங்களில் முக்கியமானது சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடுவது இப்போதெல்லாம் டைனிங் டேபிள் வீட்டுக்கு வாங்குவது ஒரு அத்தியாவசிய தேவை போல் ஆகிவிட்டது. விருந்தினர்களை அதில் உட்காரவைத்து பரிமாறுவதுதான் நாகரீகம் சௌகரியம் என ஆகிவிட்டது.

முன்பெல்லாம் வாழை இலையில் தரையில் பரிமாறுவதுதான் கௌரவம் ஆனால் இப்போது டைனிங் டேபிள் இது சரியா தவறா..?

முதலில் முன்னோர்கள் இப்படி சம்மணமிட்டு சாப்பிட்டதின் நோக்கமென்ன?சாப்பிடும் பொழுதாவது நாம் காலை மடக்கி அமர்ந்து தான் சாப்பிட வேண்டும். சாப்பிடும் பொழுது காலைத்தொங்க வைத்து அமர்வதனால் ரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாகச் செல்கிறது.

எனவே ஜீரணம் தாமதமாகிறது. காலை மடக்கி சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிட்டால் சாப்பிட, சாப்பிட, சாப்பாடு ஜீரணமாகிவிடும். ஏனென்றால் கீழே ரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும் பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது.எனவே தான் சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடும்படி வலியுறுத்தப்பட்டது..! சம்மணம் இட்டு சாப்பிட்டால் கௌரவ குறைவு என்று எண்ணிவிடாதீர்கள். உங்கள் உடல் நலத்திற்கு இதுவும் ஒரு காரணமாகும்..!



.உடுவில் பிரதேச செயலக கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டது. அவ்வணியினை படத்தில் காணலாம்.

# தென்மராட்சி கல்வி வலய பெண்களுக்கான வலைப்பந்து

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப் பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மத்தி, 17வயது, 19வயது பிரிவுகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணிகள் கிண்ணங்களைச் சுவீகரித்துள்ளன.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15வயதுப் பிரிவில் முதலாமிடத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும் பெற்றன.

17வயதுப் பிரிவில் முதலாமிடத்தைக் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் தமதாக்கின.

19வயதுப் பிரிவில் முதலாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வரணி மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் தமதாக்கின. (க)

# இளந்தளிர் வி.கழகம் இறுதிப்போட்டிக்கு தகுதி



கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய மென்பந்துப் போட்டியில் இளந்தளிர் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை 10 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் விளை யாட்டுக்கழகம் 8 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 67 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 7 ஓவர்களில் 57 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டினையும் இழந்து 10 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. (க)

# மானிப்பாய் இந்துவை வீழ்த்தி சம்பியனாகியது ஹென்றிஸ்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் இளவாலை ஹென்றிஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரிஅணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

அதிக பட்சமாக நிரோஸ்குமார் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹென்றிஸ் கல்லூரி அணி சார்பில் ராஜ்குமார் 3 இலக்குகளையும் ஜனெக்சன் இரு இலக்குகளையும், கோவர்ணன், அபிசன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹென்றிஸ் கல்லூரி அணி 4.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. பந்து வீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் சார்பில் நிரோஸ்குமார், சசிகரன் ஆகியோர் தலா ஓர் இலக்கைக்கைப்பற்றினர். 3 ஆம் இடத்தை வசாவிளான் மகா வித்தியாலயம் பெற்றது. (க)

# கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழக யாழ்.மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டி இறுதிப் போட்டியில் மாலுசந்தி மைக்கல்



கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் மாலுசந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

தனது முதலாவது போட்டியில் பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து மோதியது மைக்கல் அணி. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் 5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றது. மைககல் அணியின் பந்துவீச்சு சார்பில் பிபீலிகன் 3 அனோஜன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய மைக்கல் அணி 3 ஓவர்களில் விக்கெட் இழப்பு இன்றி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் கரணவாய் சோழங்கன் அணியை எதிர்த்து மோதிய மைக்கல் அணி 5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 105 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரசாந், 75 ரகுவரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு ஆடிய சோழங்கன் அணி 42 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுககளையும் இழந்தது.

மைக்கல் அணியின் பந்துவீச்சு சார்பில் அனோஜன் 2, தினோஜன் பிபீலிகன் தலா 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இறுதியில் 63 ஓட்டங்களினால் மைக்கல் அணி வெற்றிபெற்றது.

அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி நவசக்தி அணியை எதிர்த்து மோதிய மைக்கல் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரகுவரன் 31, அச்சுதன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய நவசக்தி அணி 44 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மைக்கல் அணியின் பந்துவீச்சின் சார்பில் அனோஜன் 2 ,தினோஜன் பிபீலிகன் தலா 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இறுதியில் 15 ஓட்டங்களினால் வெற்றிபெற்று மாலுசந்தி மைக்கல் அணி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

இறுதிப்போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை அணியை எதிர்த்து மோதவுள்ளது குறிப்பிடத் தக்கது. (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# முல்லை. மாவட்ட பி.செயலக காற்பந்தாட்ட சுற்றுப் போட்டி இறுதிப் போட்டியில் சென்ஜூட்,இளம்பறவைகள்





(முல்லைத்தீவு)

முல்லை .மாவட்ட பிரதேச செயலகத்தினால் நடத்தப் பட்ட காற்பந்தாட்ட போட்டியில் அரை இறுதியில் சென்.ஜூட் மற்றும் உதயம் அணிகள் மோதின . இந்த ஆட் டத்தில் சென்ஜூட் அணியினர் வெற்றி பெற்றனர்.

அடுத்த போட்டியாக சந்திரன் அணியை எதிர்த்து இளம் பறவைகள் அணி மோதியது. இதில் இளம்பறவைகள் அணி வெற்றி பெற்றது.

இறுதி போட்டிக்கு சென் ஜூட் மற்றும் இளம் பறவைகள் அணிகள் தகுதி பெற்றுள்ளன. (க)

# கதிர்காமநாதன் நினைவு நிகழ்வு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் மு.கதிர்காமநாதனின் அஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீடும் நாளை மறுதினம் 19ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அதன் தலைவர் சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறும்.

திருமதி ஹேமாவதி கபிலதாஸின் தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராசா, சைவப் புலவர் சு.செல்லத்துரை, திருமதி பத்மா சோமகாந்தன், தம்பு சிவசுப்பிரமணியம், திருச்செல்வன், திருமதி பவானி முகுந்தன், க.க.உதயகுமார், சட்டத்தரணி த.காண்டீபன், வீ.ஏ.திருஞானசுந்தரம், தெ.மதுசூதனன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளார். (செ)

# நாடு கடத்தப்பட்ட நபர் மீதான சர்வதேச பிழவிறாந்து ரத்து

## பிரயாணத் தடையும் நீக்கப்பட்டுள்ளது

(கொழ்ும்பு)

விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக மலேசியாவில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட நபர் மீதான சர்வதேச பிடிவிறாந்து மற்றும் பிரயாணத்தடை என்பனவற்றை கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்று ரத்து செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமையுடன் நெருங்கிய தொடர்பு கொணடிருந்ததுடன், மலேசியாவில் இருநது கொண்டு அங்கு சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டு செல்லத்துரை கிருபானந்தன் (அன்பரசன்) என்பவர் கைது செய்யப்பட்டார்.

இலங்கையில் இருந்து மலேசியாவுக்குத் தப்பியோடிய போது, இவருக்கு மலேசிய பினாங் முதலமைச்சர் இராமசாமி இவருக்கு மலேசிய கடவுச்சீட்டைப் பெறுவதற்கு உதவிபுரிந்திருந்தார் என்ற குற்றச்சாட்டும் அப்போது முன்வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, இவர், விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகவும், விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் தாயாருக்கு மலேசியாவில் வைத்தியம் செய்வதற்குரிய உதவிகளைப் புரிந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி கொழும்பு நீதிமன்றினால் எந்தவொரு குற்றச்சாட்டும் இன்றி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் இவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த சர்வதேச பிடியாணை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு வெளிநாட்டுக்கான பிரயாணத் தடையும் நீக்கப்பட்டுள்ளதுடன் அவருடைய கடவுச்சீட்டு மற்றும்ஆவணங்கள், பொருட்கள் என்பன நீதிமன்றத்தினால் திருப்பிக் கையளிக்கப்பட்டுள்ளன. (செ-9)

# அரசை எதிர்க்...

சுமத்தப்படும் குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ள மகிந்த ராஜபக்ஷ, திருட்டுத்தனமாக கடனை வழங்கும் நாடுகள் இருக்கின்றனவா என கேள்வி எழுப்பியுள்ளார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே மகிந்த ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்படியான நகைச்சுவைகளால், நாட்டை ஏமாற்ற முடியாது. நாடாளுமன்றத்தில் கூட்டு எதிர்க்கட்சி உணமையான எதிர்க்கட்சியாக செயற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் தற்போதைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்த கட்சிகள். இதனால், இந்த கட்சிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தை பாதுகாத்து வருகின்றன.

நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பும் போது, இந்த கட்சிகள் பதிலளிக்க கூடிய இலகுவான கேள்விகளை கேட்கின்றனர். அரசாங்கம் அடிக்கும் படியாக புல்டோஸ் பந்துகளை வீசுகின்றனர் என குறிப்பிட்ட மகிந்த, இன்றைய கூட்டத்தில் தான் மேடையேறி அரசை விமர்சிப்பேன் எனவும் சூளுரைத்துள்ளார். (செ-12)

# கருகிய நிலையில்...

மின்சாரம் தாக்கியதில் இவர்கள் நாலவரும் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட நான்கு பேரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

அடையாளம் காண முடியாத அளவிற்கு உடல்கள் கருகி இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறுகின்றது.

நேற்று காலை 10 மணியாளவில் தெஹிவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி குறித்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக கப்பட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் வெலிகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

65 வயதுடைய தந்தை, 52 வயதுடைய தாய், 13 வயதுடைய மகள் மற்றும் 13 வயதுடைய உறவுக்கார சிறுமி ஒருவருமே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாடிகளை கொண்ட வீட்டின் கீழ் மாடியில் இருந்து குறித்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது. (செ-12)

# இளைஞருக்கு பைக் வாங்...

கலைத்து கலைத்து வாளால் வெட்டிய சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. மூன்று மோட்டார் சைக்கிளில் வாள்கள் சகிதம் வந்த இளைஞர்கள், விறகு காலையில் நின்ற இளைஞர்களை பலர் முன்னிலையில் வாளால் வெட்டினர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மாணவர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த யாழ். பொலிஸார், வாள் வெட்டில் ஈடுபட்ட கலட்டி, மற்றும் உயரப்புலம் ஒழுங்கையை சேர்ந்த இரு சமூக விரோத இளைஞர்களை கைது செய்திருந்தனர்.

இச்சம்பவத்தில் வாளால் வெட்டிய சமூக விரோத கும்பலை சேர்ந்த ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை அங்கு விட்டு விட்டு தப்பி ஓடியுள்ளார்.

இம்மோட்டார் சைக்கிள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளரான இளைஞரை கைது செய்ய சென்றபோது அவர் தலைமறைவாகியுள்ளார். இந் நிலையில் அந்த மோட்டார் சைக்கிளை வாங்கி கொடுத்த பருத்தித்துறை வீதி நல்லூரினை சேர்ந்த அவரது சித்தியை கைது செய்து, யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் பதினெட்டாம் திகதி வரை அவருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான பொலிஸாரின் அதிரடி செயற்பாடுகள் நடைபெறும் எனவும், சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மூன்று நாட்களிற்குள் சரணடையாவிட்டால் அவர்களது பெற்றோர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி.பி.எதிர்வீரசிங்க தெரிவித்தார். (செ-4)

# பொட்டு அம்...

ட்டீ என்ற பெயரில் மறைந்து வாழ்ந்து வருகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது நந்திக்கடல் மோதலில் பொட்டு அம்மான் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்ட போதிலும் அவரது சடலம் மீட்கப்படவில்லை.

வன்னி யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகவுள்ள நிலையில் பொட்டு அம்மான் உயிருடன் இருப்பது பற்றிய தகவல்களை திவயின வெளியிட்டுள்ளது.

பொட்டு அம்மான் உயிரிழந்தார் என்பது பற்றிய உறுதியான சாட்சியங்களை கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் இந்திய அதிகாரிகளுக்கு வழங்க முடியாத நிலைமை காணப்பட்டதாக அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் மற்றும் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவரான பொட்டு அமமான் உயிருடன் இருப்பது தொடர்பில் காலத்திற்கு காலம் ஊடகங்கள் தகவல் வெளியிட்டு வருகின்றன.

எனினும் உறுதியான சான்றுகளின் அடிப்படையில் இந்த தகவல்கள் வெளியிடப்படுவதில்லை.

2009-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொட்டு அம்மான் உயிரிழந்தார் என்பதனை அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதிப்படுத்தியிருந்தார்.

சடலம் கிடைக்காத போதிலும், பொட்டுஅம்மான்உயிர்ழந்தமையை நூறு வீதம் உறுதி செய்ய முடியும் என சர்வதேச ஊடகங்களுக்கும் கோத்தபாய தெரிவித்திருந்தார்.

எனினும் பொட்டு அம்மானை படையினர் ஹொங்கொங்கில் கைது செய்ததாகவும், கானா நாட்டில் வாழ்ந்து வருவதாகவும் கடந்த காலங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எது எவ்வாறெனினும், பொட்டு அம்மான் பற்றிய தகவல்களை பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# அரசு தருவதை அப்படியே ஏற்...

மாநிலத்திலே சுய ஆட்சி மத்தியிலே கூட்டாட்சி என்ற முறைமையை கொண்டுவருவது தான் சமஸ்டி, இதனை பெற்றுக் கொள்வதற்கு புத்தி ஜீவிகள் மட்டு மல்லாது, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாரிய பொறுப்பு உண்டு என்றார் பேராசிரியர் சிற்றம்பலம்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் மேற்படி வரைபு தொடர்பில் பல்கலை மாணவர்களும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன் போது தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வரைவில் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் சுய ஆட்சியுடன் கூடிய கூட்டாச்சி மறுக்கப்பட்டால் தமிழர் தரப்பிலிருந்து அடுத்த கட்ட நடவடிக்கை எவ்வாறு இருக்கும் என்று பல கேள்விகளும் கருத்துக்களும் மாணவர்களால் முன்வைக்கப்பட்டன.

மாணவர்களது கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் சட்டத்துறை விரிவுரையாளர் சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

மாணவர்கள் கூறிய கருத்துக்களையும் பேரவையின் தீர்வுதிட்ட முன்வரைபில் இணைத்துக்கொள் ளப்படும் என பேச்சாளர்களால் கூறப பட்டது. மேலும் பேரவையின் தீர்வுத திட்ட முன்வரைபும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கி வைக்கப்படிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# வடக்குமக்களின்...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் முன்னைய அரசாங்கம் வடக்கு மக்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களை விநியோகித்தாலும் அன்று அந்த மக்களின் முகத்தில் சிரிப்பை காணமுடியவில்லை.

நான் வடக்கு மக்களுக்கு எந்த பொருளையும் விநியோகிக்கவில்லை என்ற போதிலும் வடக்கு செல்லும் போது என்னை சிரித்த முகத்துடன் அவர்கள் வரவேற்கின்றனர்.

வடக்கு மக்களின் இதய துடிப்பை அறிந்து கொண்டு நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்ப அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளே இதற்கு காரணமாகும்.

எனவே வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்னெடுக்கப்படும் நல்லிணக்க வேலைத்திட்டங்களை புரிந்து கொண்டு அதனை செயற்படுத்த பங்களிப்பை வழங்க வேண்டியது தெற்கு மக்களின் கடமையாகும்.

நாட்டிற்கு தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது என்பதை அரசியல்வாதிகளால் மாத்திரம் தனியாக செய்ய முடியாது.

படித்தவர்கள், புத்திஜீவிகள் என அனைவரும் நாட்டின் எதிர்காலத்திற்காக இந்த கடமையை பொறுப்பேற்க வேண்டும்.

நல்லிணக்க வேலைத்திட்டத்தை வலுப்படுத்த இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் பலவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அதற்காக எம்முடன் இணைந்து கொள்ளுங்கள், நாட்டை மகிழ்ச்சியுடன் வாழும் மனிதர்கள் இருக்கும் நாடாக கட்டியெழுப்ப வேண்டுமாயின் நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம் ஆகிய வார்த்தைகள் யதார்த்தமாக மாறவேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# அமைச்சர்களின் மலசலகூட...

உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைச்சர்களின் மலசலகூடங்கள்கூட மிக தரமாக காணப்படுகிறது. சிலரின் மலசலகூடங்களுக்கு ஏசி கூட பொருத்தி இருக்கிறார்கள், விமல் வீரவன்வசவின் மாதாந்த மின் கட்டணம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், ஹெகலிய ரம்புக்வெலவின் மாதாந்த வீட்டு மின் கட்டணம் ஒரு இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்.

ஆனால் மீள்குடியேறிய மக்களுக்கு அரசு வழங்கியது பத்து தகரமும், 25 ஆயிரம் ரூபாய் பணமும் இதில் அவர்கள் எப்படி வீடுகளை அமைத்து வாழ முடியும்? எனக்கேள்வி எழுப்பிய அவர், காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வருகின்ற அரசுக்கள் தங்களுடைய நலன்களையும், பொருளாதார பலத்தையும் பெருக்கிக் கொண்டார்களே தவிர மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்ததாக இல்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கிலும் தெற்கிலும் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்திற்கு வருகின்றவர்கள் இனவாதம் பேசுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஆனால் நடந்து முடிந்த யுத்தத்தின் போது இவர்களோ இவர்களது பிள்ளைகளோ எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. பாதிக்கப்பட்டதும், இறந்ததும் நாட்டின் அப்பாவி மக்களுடைய பிள்ளைகளே.

கடந்த 68 ஆண்டுகளாக மக்களால் மாறிமாறி இரண்டு கடசிகளே ஆட்சிக்கு கொண்டு வரப்பட்டன. இந்த நிலைமை மாறவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட ஜே.வி.பி. கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (செ-12)

# தங்கையின் கணவர் தாக்கி...

அவரது தங்கையின் கணவருக்கும் இடையில் கடந்த 4 ஆம் திகதி பனாங்கிழக்கு பிடுங்குவதில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, தங்கையின் கணவர் மண்வெட்டியால அப்பெண்ணைத் தாக்கியுள்ளார்.

தலையில் படுகாயமடைந்த பெண் காரைநகர் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு சென்ற யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி சின்னத்துரை சதீஸ்தரன் விசாரணைகளை மேற்கொண்டார். யாழ். போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய நிபுணர் உருத்திரபதி மயூரதன் மேறகொண்ட உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்ய ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (செ-30)

# விளையாட்டு...

டுள்ளனர்.

இந்தவழக்கில் தலைமறைவாகியுள்ள ஏழாம் எதிரியான உமாகாந்தன் கிரிகேசன் இல்லாமலேயே வழக்கு விசாரணை நடைபெற்றது.

எனவே, சர்வதேச பொலிஸாரின் துணையுடன் இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு யாழ்.மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் கடந்த 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கட் விளையாட்டுப் போட்டியின் போது, கிறிஸ்தோபர் பிரேமன் என்ற 21 வயதுடைய கிரிக்கெட் விளையாட்டு வீரர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அருளானந்தம் சோபஸ், இராஜகுலேந்திரன் நிசாந்தன், வீரையா ஜெயப்பிரகாஷ், ஜெயலத் எமில்டன், இராஜேஸ்வரன் சப்தஸ்வரன், அமிர்தலிங்கம் விதன், உமாகாந்தன் கிரிகேசன் ஆகிய 7 எதிரிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்.மேல்நீதிமன்றத்தில் பொது எண்ணத்துடன் கொலை செய்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் அரச தரப்பில் முதலாவது சாட்சியாக சாட்சியமளித்த இராமகிருஸ்ணன அகில்ராஜ் முதலாம் எதிரி சோபஸ் கொல்லப்பட்ட பிரேமனுக்கு கறுத்த கொட்டன் பொல்லால் தலையில் அடித்ததையும், ஏழாம் எதிரி கிரிகேசன் இறந்த பிரேமனுக்கு விக்கட்டால் வயிற்றில் அடித்ததையும் நேரில் கண்ணால் கண்டதாக தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அடிபட்ட பிரேமன், காயமடைந்து நிலத்தில் சரிந்தார். மைதானத்தில் விழுந்து கிடந்த அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முயற்சித்த போது, அவ்வழியால் முதலில் வந்த இரண்டு முச்சக்கரவண்டிகள் அவரை ஏற்றிச் செல்லமறுத்து விட்டன. பின்னர் வயோதிப ஐயா ஒருவருடைய முச்சக்கரவண்டியிலேயே, அடிகாயங்களுக்கு ஆளாகிய பிரேமனை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்தேன். ஏழு நாட்கள் கோமா நிலையில் இருந்தபிரேமன் 21ஆம் திகதி மரணமடைந்தார்.

சம்பவம் நடைபெற்ற விளையாட்டு மைதானத்தில் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்த சமயம் பிரேமன் துடுப்பாட்டத்தில் ஈடுபடுவதற்காக, தனது முறைக்காகக் காத்திருந்த போது, கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது, முதலாம் எதிரி சோபஸ் இரண்டாம் எதிரி நிசாந்தன் மூன்றாம் எதிரி ஜெயப்பிரகாஷ் ஏழாம் எதிரி கிரிகேசன் ஆகியோர் விளையாட்டு மைதானத்திற்குள் நுழைந்தனர். இரண்டாம் எதிரியாகிய நிசாந்தன் முதலில் விக்கட்டைத் தட்டிவிட்டார். அவரைத் தொடர்ந்து மற்றைய எதிரிகளும் விக்கட்டைத் தட்டிவிட்டு எங்களைத் தாக்கினார்கள். அவ்வாறு தாக்கிய போது தான், கொல்லப்பட்டவராகிய பிரேமனை முதலாம் எதிரி சோபசும் 7ஆம் எதிரி கிரிகேசனும் முறையே கொட்டன் பொல்லாலும் விக்கட்டினாலும் தாக்கினார்கள். அவ்வாறு அவர்கள் தாக்கியபோது, இரண்டாம் எதிரியாகிய நிசாந்தன் ஏனையவர்களைத் தாக்கி பிரேமனிடம் செல்லவிடாமல் துரத்தினார் என அகில்ராஜ் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்.

முதலாவது சாட்சியைத் தொடர்ந்து சாட்சியமளித்த ஏனைய அரச சாட்சிகள் அகில்ராஜின் சாட்சியத்தை ஒப்புறுதி செய்து சாட்சியமளித்தனர்.

இறந்தவராகிய கிறிஸ்தோபர் பிரேமனின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கந்தையா ரட்னசிங்கம் மருத்து அறிக்கையை சமர்ப்பித்து, நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

விசாரணைகளின் முடிவில், நீதிமன்றத்தில அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் முதலாம் எதிரி சோபஸ், இரண்டாம் எதிரி நிசாந்தன், ஏழாம் எதிரி கிரிகேசன் ஆகியோரை நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டுள்ளது என்று நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார்.

அவர் தனது தீர்ப்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்களை நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. எதிரிகள் ஏழு பேரும், சட்ட விரோத கூட்டம் கூடி, பொது எண்ணத்துடன் ஒன்றுசேர்ந்து கொல்லப்பட்டவராகிய கிறிஸ்டோபர் பிரேமனை கொலை செய்துள்ளார்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுடன் எதிரிகள் எவ்வாறு சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதை ஆய்வு செய்த போது, சில எதிரிகள் அவ்விடத்தில் நின்றுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது. ஆனால் அவர்கள் கிறிஸ்டோபர் பிரேமன் மீது எதுவிதமான தாக்குதல்களும் நடத்தவில்லை.

அதனடிப்படையில், மூன்றாவது எதிரி ஜெயப்பிரகாஷ், நாலாம் எதிரி எமில்டன், ஐந்தாம் எதிரி சப்தஸ்வரன், ஆறாம் எதிரி விதன் ஆகிய நான்கு பேருக்கும் எதிராக வழக்குத் தொடுநர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் கொலைக் குற்றச்சாட்டை எண்பிக்கத் தவறியுள்ளார். எனவே, இந்த நால்வரையும் இந்த நீதிமன்றம் விடுதலை செய்கின்றது.

முதலாம் எதிரி சோபஸ், இரண்டாம் எதிரி நிசாந்தன், ஏழாம் எதிரி கிரிகேசன் இந்த மூவரும் பொது எண்ணத்துடன் ஒன்றுசேர்ந்து பிரேமன் என்பவரை ஆட் கொலை புரிந்துள்ளார்கள் என்பது விசாரணைகளின் மூலம் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் இரண்டாம் எதிரி நிசாந்தன் மற்றைய இரண்டு எதிரிகளுக்கும் உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருந்து ஆட்கொலை புரிந்துள்ளார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது, எதிரி நிசாந்தன் இறந்தவரை அடிக்கவில்லை. ஆனால் இறந்தவராகிய பிரேமன் விளையாடிய அணி உறுப்பினர்களை விக்கெட்டால் அடித்து அவர்களை மைதானத்தில் இருந்து கலைத்துள்ளார்.

முதலாம் எதிரி சோபசும் ஏழாம் கிரிகேசனும் இறந்தவரைத் தாக்கியபோதே, இரண்டாம் எதிரி நிசாந்தன் இவ்வாறு மற்றையவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இறந்தவரை எதிரிகள் இருவர் தாக்கிய போது, அங்கிருந்த பிரேமனின் அணி உறுப்பினர்கள் அவரைக் காப்பாற்றுவதற்காக அவருக்கு அருகில் செல்ல அனுமதிக்காத வகையில், இரண்டாம் எதிரி நிசாந்தன் அந்த உறுப்பினர்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளார். அதேநேரம் சோபசும் கிரிகேசனும் இறந்தவரைத் தாக்கியபோது, நிசாந்தன் அதனைத் தடுக்கவில்லை.

நிசாந்தனே, முதலில் மைதானத்திற்குள் சென்று விக்கெட்டைத் தட்டிவிட்டு, பிரச்சினையை ஆரம்பித்தவராவார். எனவே, மூன்று எதிரிகளும் பொது எண்ணத்துடன் பிரேமனைக் கொலை செய்தர்ர்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி எண்பிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் விளையாட்டு சம்பந்தமான தரமான மனப்பான்மை இருக்கவேண்டும். கிரிக்கெட் விளையாட்டு என்பது கனவான்களின் விளையாட்டாகும். எனவே இந்த விளையாட்டில அந்தமனப்பான்மை உயர்ந்த தன்மையுடையதாக இருப்பது அவசியமாகும்.

இந்த வழக்கில் கனவான் விளையாட்டாகிய கிரிக்கெட விளையாட்டு நடைபெறும்மைதானத்தை இந்த 3 எதிரிகளும கொலைக் களமாக மாற்றியுள்ளனர். மதிப்புக்குரிய கிரிக்கெட் விளையாட்டின் உபகரணங்களை இவர்கள் கொலை செய்வதற்குரிய ஆயுதங்களாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.


## விற்பனையாகிறது!

தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5
மாணவர்களுக்கு

முதலாம் தவணை மாதிரி வினாத்தாள்கள்

தமிழ் , கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம்
ஆகிய 15 பாடங்கள் விடைகளுடன்.,

# யாழ் எக்ஸ்பிரஸ்

பாடத்திட்டத்திற்கு அமைவாக நாடளாவியரீதியில்
15 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
வெளிவந்துள்ளது.

தரம் 5 மாணவர்களுக்கு
திருகோணமலை எஸ்.கணேசலிங்கம் ஆக்கத்தில்
1 தொடக்கம் 20 வரை மாதிரி வினாத்தாள்

**வெற்றிச் சிகரம்** தொடர் வரிசையில் வெளிவருகின்றது.

வெளியீடு: யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/1, ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ. பே : 077 6258778

(சி-4027)


விளையாட்டு விளையாட்டாகவே இருக்க வேண்டும். விளையாட்டு எப்போது விபரீதமாக மாறுகின்றதோ அப்போது, வன்செயல் தலைவிரித்தாடும். அத்தகைய வன்செயலில பங்குபற்றிய அனைவரும் குற்றம் புரிந்தவர்களாகவே கருதப்படுவார்கள்.

இந்த வழக்கில் இறந்தவராகிய இளைஞன் கிறிஸ்டோபர் பிரேமன் கிரிக்கெட் விளையாடுவதற்காக 14.03.2010 அன்று செங்குந்தா மைதானத்திற்கு வந்தார். பின்னர் அவரின் சடல்மே அவருடைய வீட்டிற்குச் சென்றது.

இருபத்தியொரு வயதில் வாழவேண்டிய வாலிபனை ஆட்கொலை புரிந்தகுற்றச்சாட்டுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்குவதே அதற்கு நிவாரணமாகும். கிரிக்கெட் மைதானத்தில் இந்தக் கொலையைப் புரிந்தமை மன்னிக்க முடியாத குற்றம்.

கிரிக்கெட் விளையாடச் செல்பவர்கள், பிணங்களாகத்தான் வீடுகளுக்கு வருவார்கள் என்ற அச்சநிலையை இந்த வழக்கு ஏற்படுத்தியுள்ளது. வாழவேண்டிய ஒரு வாலிபனின் உயிர் அநியாயமான முறையில பறிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் மைதானங்கள் மட்டுமல்ல எந்த விளையாட்டுப் போட்டியின்போதும் நடைபெறும் ஆட்கொலைகளுக்கு இந்த வழக்கின் தீர்ப்பு ஒரு எச்சரிக்கை மணியாக இருக்க வேண்டும்.

எனவே முதலாம் எதிரி, இரண்டாம் எதிரி, ஏழாம் எதிரி ஆகிய மூவருக்கும் இந்த நீதிமன்றம் தலா 15 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிப்பதுடன் பத்தாயிரம் ரூபாய் தண்டமும் செலுத்தவேண்டும். தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறினால் ஒரு வருடம் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளார். (செ-9)

# நாமலுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ திருமணம் செய்து கொள்ளத் தயாராகியுள்ளார்.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பெண் மருத்துவர் ஒருவரையே திருமணம் செய்து கொள்ள உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் திருமணம் எங்கு, எப்போது நடைபெறும் என்ற தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ தம்பதியினர் திருமணத்திற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# மின்சார நிலையங்களில்...

வலை வெளியிட்டுள்ளார்.

அனைத்து மின்சாரசபை நிலையங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னதாக உத்தரவிட்டிருந்தார்.

பியகமவில் மின்மாற்றி ஒன்று வெடித்து, மின்சாரத் தடை ஏற்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுவரை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் 7 1/2 மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மின் விநியோகம்...

யில் ஆரம்பிக்கப்பட்டதும் இயல்பு நிலை ஏற்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நுரைச்சோலை அனல் மின்சார மையத்தின் தன்னியக்க உற்பத்தியில் ஏற்பட்ட பிரச்சினையே மின்சார தடைக்கான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று வரை தற்போது நாட்டில் நேர அட்டவணையின்படி நாளொன்றிற்கு 7 1/2 மணிநேர மின்சார விநியோகத் தடை மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


யாழ் - கொழும்பு முன்னணி
ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு &
வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்

Business &
Hotel Management
With English Course Free

SIKARAM
HOTEL SCHOOL



ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள்
பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk

அனுமதிகளுக்கு
077 3616 798, 021 222 0011

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


# அரசு தருவதை...

ள்ள யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்,

தமிழ் மக்களுடைய நியாயமான உரிமைகளை மக்களின் பங்களிப்புடன் பெறுவதற்கே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டு, அதன் மூலம் எமக்கான தீர்வினை தருமாறு அரசினை வலியுறுத்தி வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்ட முன் வரைபு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் செய்த தியாகம், அவர்கள் விடிவுக்காக உழைக்க வேண்டிய கடமையையும் கட்டாயத்தையும் எமது மக்களிடத்தில் சுமத்தியுள்ளது. மக்களுடைய தியாகத்திற்கு அவர்களுக்கான நியாயமான நீதியான நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு விடிவை தீர்வாக சமர்ப்பிக்க வேண்டிய கடமை இந்த தேசத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட எந்த யாப்புக்களுமே தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் யாப்பிலே எத்தகையதான யாப்பு எமது மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வினை வழங்க முடியும் என்பதனை பொறுத்த வரையில் மாற்றுக் கருத்து இருக்க முடியாத ஒரு யாப்புதான் சமஷ்டி யாப்பு.

எல்லோரினையும் இணைத்து சம பங்காளிகளாக்குகின்ற ஒரு யாப்பு இது, இந்த சமஷ்டி என்ற பதத்தை முதன் முதலில் பிரயோகித்தவர்கள் தமிழர்கள் அல்லர். சிங்கள மக்கள்தான் உபயோகித்தவர்கள் அதுவும், தனிச சிங்களத்தை கொண்டுவந்த பண்டாரநாயக்க, கண்டிய இராசதானிகளும் தான் சமஷ்டி என்ற பதத்தை மிக பிரபல்யமான பதமாக சுதந்திரம் கிடைக்கும் வரையில் பயன்படுத்தி உள்ளார்கள்.

இவர்களுடைய கோரிக்கையிலே மத்திய கண்டிப்பகுதி ஒன்று, கரையோரப்பகுதி ஒன்றும் வடக்கு கிழக்கு இணைந்தது தமிழர் தாயகம் என்று மூன்றினையும் முன்னிறுத்தி உள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அலகிலே பிராந்தியங்கள் வந்துள்ளன.

சம பங்காளிகளாக மக்கள் அனைவரும் இருக்கும் போது வெளிப்படையான ஊழல் அற்ற நிர்வாகம் அமையும் என்பதனை தெட்டத்தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய பொறுப்பு சிங்கள மக்களிடத்தில் உண்டு. அரசியல்வாதிகள் இத்தகைய புரிதலை விரும்பவில்லை. இவற்றோடு கொழும்பை மையமாக வைத்து எடுக்கப்படுகின்ற முடிவுகளால் பிற இனங்கள் பாதிக்கப்படுகின்றன.

தங்களுடைய செல்வாக்கும் அதிகாரமும், அரசியல் இலாபமும் போய்விடும் என்பதே இந்த விரும்பாமைக்கு காரணம் ஆகும். சமஷ்டி அரசியல் திட்டத்திலே மத்திய மாகாண அரசுகளுக்கிடையில் உள்ள திட்டங்கள் சரியாக வரையப்பட்டு இருக்கும். அதனை ஒருவர் பறிக்கவோ நீக்க முடியாத நிலை ஏற்படும். தற்போது ஒரு நல்ல சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி நாங்கள் நல்ல ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பங்காளிகளாக, தேசிய அரசினை தீர்மானிக்கும் பங்காளிகளாக மாற்றும்

23ஆம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.